بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - துல்கஅதஃ 18 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - இஹ்ஸான் 08 ★ 08 ஜீன் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَرَحۡمَتِیۡ وَسِعَتۡ کُلَّ شَیۡءٍ ؕ فَسَاَکۡتُبُہَا لِلَّذِیۡنَ یَتَّقُوۡنَ وَیُؤۡتُوۡنَ الزَّکٰوۃَ وَالَّذِیۡنَ ہُمۡ بِاٰیٰتِنَا یُؤۡمِنُوۡنَ ۚ﴿۱۵۷﴾

**பொருள் :**

என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸகாத் கொடுப்போருக்கும், மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நான் அதனைக் கட்டாயம் எழுதுவேன்.

(அல்அஃராப் :157)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## எனது ஜமாத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கு ஏற்ப திகழாதவர் காய்ந்த கிளை ஆவார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நான் நூல் ஒன்றை வடிக்க இருக்கின்றேன். அதில் தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாத மக்கள் அனைவரும் தனியாக பிரிக்கப்படுவார்கள். சின்னச் சின்ன விஷயங்களில் சண்டை நிகழ்கின்றது. உதாரணமாக, வித்தைக் காட்டக்கூடிய ஒருவர் பத்து அடி பல்டி அடித்துவிட்டார் என்று ஒருவர் கூறுகின்றார். மற்றொருவர் அதுகுறித்து தர்க்கம் செய்ய அமர்ந்துவிடுகின்றார். மேலும், இவ்வாறு பகைமைக்கான வடிவம் உருவாகிவிடுகின்றது. நினைவிற் கொள்ளுங்கள்! பகைமை விலகிவிடுவது மஹ்தியின் அடையாளம் ஆகும். அந்த அடையாளம் நிறைவேறாதா என்ன? அது நிச்சயம் நிறைவேறும். நீங்கள் ஏன் பொறுமை செய்வதில்லை!

உதாரணமாக, சில நோய்களை முற்றிலும் அகற்றிவிடாத வரை நோய் தீருவதில்லை என்பது மருத்துவ தத்துவம் ஆகும். என் மூலமாக இன்ஷாஅல்லாஹ் ஒரு நல்லடியார்களின் ஜமாஅத் உருவாகும்.

பரஸ்பர பகைமைக்கான காரணி என்ன? கருமித்தனம் ஆகும். ஆணவம் ஆகும். சுயநலம் ஆகும். மேலும் ஆக்ரோஷம் ஆகும். நான் விரைவில் ஒரு நூலை எழுதுவேன் என்று நான் கூறியிருந்தேன். மேலும், தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாத மற்றும் பரஸ்பரம் அன்பு மற்றும் நேசத்துடன் இருக்க முடியாத மக்கள் அனைவரையும் இந்த ஜமாஅத்திலிருந்து அதில் நான் விலக்கி விடுவேன். எனது ஜமாத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கேற்ப திகழாத நபர் காய்ந்த கிளை ஆவார். எவர்கள் அப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனரோ அவர்கள் நினைவிற் கொள்ளட்டும்!

சிறந்த முன்மாதிரியை வெளிப்படுத்தாத வரை அவர்கள் சில நாள் விருந்தாளிகள் ஆவர். ஒருவரின் காரணமாக நான் ஆட்சேபனைக்கு ஆளாகுவதை விரும்பவில்லை. எனது ஜமாஅத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கேற்ப திகழாத நபர் காய்ந்த கிளை ஆவார். அதனை தோட்டக்காரர் வெட்டாமல் என்ன செய்வார்? காய்ந்த கிளை மற்ற பசுங்கிளைகளுடன் இருந்து கொண்டு தண்ணீரை உறிஞ்சிக் கொள்ளும். ஆனால், அது அதனை பசுமையாக ஆக்குவதில்லை. மாறாக, அந்தக் (காய்ந்த) கிளை மற்றவற்றையும் வீணாக்கி விடுகின்றது. **எனவே அஞ்சிக் கொள்ளுங்கள். தன்னை சீர்படுத்திக் கொள்ளாத நபர் என்னுடன் இருக்க மாட்டார்.**

(மல்ஃபூஸாத், தொகுதி 1,பக்கம் 458, காதியான் பதிப்பு -2003)

## சில மக்கள் கருமித்தனத்தின் காரணமாக பிள்ளைகளுக்கு முழுமையான உணவு கொடுப்பதில்லை அல்லது அவர்களின் வளர்ச்சிக்கு அவசியமான உணவு கொடுப்பதில்லை. உகந்த ஆடை கொடுப்பதில்லை அவ்வாறு செய்வது அவர்களை கொலை செய்வதற்கு சமம் ஆகும்

وَلَا تَقۡتُلُوۡۤا اَوۡلَادَکُمۡ خَشۡیَۃَ اِمۡلَاقٍ ؕ نَحۡنُ نَرۡزُقُہُمۡ وَاِیَّاکُمۡ ؕ اِنَّ قَتۡلَہُمۡ کَانَ خِطۡاً کَبِیۡرًا ﴿۳۲﴾ (17:32)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

لَا تَقۡتُلُوۡۤا اَوۡلَادَکُمۡ خَشۡیَۃَ اِمۡلَاقٍ ؕ

என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது பிள்ளைகளுக்கு பணம் செலவாகும் என்ற அச்சத்தால் அவர்களை கொன்றுவிடாதீர்கள். இந்தக் கட்டளை பெண் குழந்தைகளை கொல்வது பற்றியது கிடையாது. ஏனெனில், செல்வம் செலவாகி விடும் என்ற அச்சத்தால் மக்கள் அவர்களை கொன்றுவிடுகின்றனர் என்ற இந்தக் காரணம் பெண் குழந்தைகளின் கொலை தொடர்பாக திருக்குர்ஆனில் எந்த இடத்திலும் எடுத்துரைக்கப்படவில்லை. மாறாக, (பெண் பிள்ளைகளாகிய) அவர்களின் பிறப்பை தங்களது இழிவிற்கான காரணியாக கருதுகின்றனர்; எனவே அவர்களை கொன்றுவிடுகின்றனர் என்ற காரணம் கூறப்பட்டுள்ளது. இதேபோன்று, ஏழ்மை மற்றும் கஷ்டத்தின் காரணமாக பிள்ளைகளை கொலை செய்யாதீர்கள் என்ற பொருளும் இந்த வசனத்திற்கு இருக்க முடியாது. மாறாக, அதன் செல்வம் செலவிடுதல் என்பதாகும். பணம் செலவாகும் என்ற அச்சத்தால் அவர்களை கொலை செய்யாதீர்கள் என்பது இந்த வசனத்தின் பொருளாகும்.

பணம் செலவாகும் என்ற அச்சத்தால் ஒருவர் (தனது) பிள்ளைகளை கொலையும் செய்வாரா என்ன? என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகின்றது. எனவே உலகின் அனுபவத்தை

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்

## நபிமொழி

### மென்மையுடன் நடந்து கொள்ளுதல்

(2391) ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒரு நபர் மரணித்துவிட்டார். மேலும், நீர் (உலகில்) என்ன செய்து வந்தீர்? என்று அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, நான் மக்களிடம் வியாபாரம் செய்து வந்தேன். செல்வந்தர்களுக்கு காலக் கெடு வழங்கி வந்தேன். ஏழைகளுக்கு (கடனை) மன்னித்து வந்தேன் என்று அந்த நபர் கூறினார். இதனால் அவர் (அல்லாஹ்வால்) மன்னிக்கப்பட்டார்.

நானும் இந்த ஹதீஸை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன் என்று ஹஸ்ரத் அபூ மஸூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

### நன்மக்கள் கடனை நல்லமுறையில் செலுத்துகின்றனர்

(2392) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும், அன்னாரிடம் (தனக்கு) ஒட்டகம் கொடுக்கும்படி வேண்டினார். இவருக்கு கொடுத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, நம்மிடம் இவரது ஒட்டகத்தை விட அதிக வயதுடைய ஒட்டகமே இருக்கின்றது என்று ஸஹாபிகள் கூறினர். எனக்கு தாங்கள் அதிகரித்து வழங்குங்கள். அல்லாஹ்வும் தங்களுக்கு அதிகரித்து வழங்குவான் என்று அந்த நபர் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவருக்கு அந்த ஒட்டகத்தையே கொடுத்துவிடுங்கள். ஏனெனில், எவர்கள் கடனை நல்ல முறையில் செலுத்துகின்றார்களோ அந்த மக்களே நன்மக்கள் ஆவர்.

(ஸஹீஹ் அல்புகாரி, தொகுதி 4, கிதாப் அல்இஸ்திக்ராஸ், 2008 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியீட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய மேற்கோள்களின் ஒளியில் கஷ்டங்கள் மற்றும் துன்பத்தின் போது பொறுமை செய்வதற்கான அறிவுரை**

**நபிமார்களின் ஜமாஅத்துகளின் பணி பொறுமை மற்றும் சட்டத்தை பேணுவதல் ஆகும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் ஜமாஅத்திற்கு பொறுமை செய்வதற்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். துஆ செய்வதற்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், எவர்களின் பாதங்கள் மென்மையானவையாக இருக்குமோ மேலும், எவர்களால் என்னுடன் முட்கள் நிறைந்த மற்றும் கரடுமுடான பாதைகளில் நடக்க முடியாதோ மேலும் பொறுமை செய்வதற்கான ஆற்றல் பெற்றிருக்கவில்லையோ அவர் நிச்சயமாக என்னை விட்டு விலகிக் கொள்ளட்டும்**

**இந்த பொறுமை என்ற பண்புதானே உலகில் ஜமாஅத்தின் தனித்தன்மையை நிலைப் பெறச் செய்துள்ளது.**

**நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். அமைதியை நிலைநிலைநாட்டுவதற்காகவும், அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுகளாக ஆகுவதற்காகவும் நீங்கள் பொறுமையை கையாள வேண்டும் என்று அன்னார் (அலை) நமக்கு போதனை நல்கியுள்ளார்கள்**

**எனவே பொறுமை என்பது நிரந்தர மனப்பான்மையுடனும், பணிவுடனும், துஆக்களுடனும் அல்லாஹ்வின் திருப்தியை வேண்டுவதன் பெயர் ஆகும்**

**இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, பொறுமை என்பது எந்தவொரு பலவீனத்தின் காரணமாகவோ, அச்சத்தின் காரணமாகவோ இருத்தல் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் பின்னர் அதுவே அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடிய உண்மையான பொறுமை ஆகும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஏப்ரல் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **28ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பாகிஸ்தானில் அல்லது இன்னும் வேறு சில நாடுகளில் ஜமாஅத்திற்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளில் நாம் பொறுமை மட்டுமே காட்டுவதற்கு பகரமாக சில எதிர்நடவடிக்கைகளையும் வெளிப்படுத்த வேண்டும்; மிகவும் பொறுமை செய்தாகிவிட்டது என்று சில மக்கள் எனக்கு எழுதுகின்றனர். மேலும் அதற்காக மிகவும் அழுத்தம் நிறைந்த தனது சான்றுகளையும் கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறு ஜமாஅத் எதிர்வினை ஆற்றியது; மேலும், சில இடங்களில் எதிர்வினையாற்ற அன்னார் (ரலி) ஜமாஅத்திற்கு அனுமதி நல்கினார்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் உதாரணத்தை கொடுப்பதற்கும் முயற்சி செய்கின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பக்கம் சுட்டிக் காட்டப்படும் இந்த விஷயங்கள் முற்றிலும் தவறானவையாகும். ஆயினும், அந்த விஷயங்கள் தவறாக புரியப்பட்டுள்ளன. சில சம்பவங்கள் அநேகமாக வந்திருக்கலாம். எவராவது படித்திருக்கலாம். ஆனால், தவறாக புரிந்திருப்பார்கள். ஆம்! அன்னார் (ரலி) சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்து கொண்டு சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். ஆனால், சிந்திக்காமல், புரியாமல் கலகக்காரர்களின் ஊர்வலங்களை போன்று ஊர்வலமாக செல்வதற்கு அனுமதி நல்கிவிட்டார்கள் என்பது கிடையாது. அடுத்து, ஒரு சூழலில் ஒரு போராட்டம் நடந்தது என்று எவராவது கூறினாலும் கூட பின்னர் அது காலத்தின் கலீஃபாவின் அனுமதியின் கீழ் இருந்ததே தவிர, ஒவ்வொரு அதிகாரியும் தன்னிச்சையாக தனது மக்களை ஒன்றுகூட்டி போராட்டத்தை தொடங்கிவிடவில்லை.

எவ்வாறு இருப்பினும், நாட்டின் பிரிவினைக்கு முன்னதாக இந்தியாவில் ஆங்கிலேயர்களின் அரசாங்கம் இருந்தபோதும், சில ஆங்கிலேய அதிகாரிகளும், நமது மற்ற எதிர் தரப்பு அதிகாரிகளும் பல முறை இதற்கு முயற்சி செய்தனர். அதாவது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சொற்பொழிவுகளை கிளர்ச்சி விளைவிக்கும் சொற்பொழிவுகள் என்று குறிப்பிட்டு அல்லது அதற்கான வடிவத்தை கொடுத்து பின்னர் அன்னார் (ரலி) மீது கை வைக்க வேண்டும் என்று அவர்கள் முயற்சிகள் செய்தனர். ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்களின் முகத்தை வெளிப்படுத்தி, நபிமார்களின் ஜமாஅத்துகளின் பணி பொறுமை மற்றும் சட்டத்தை பேணுவதல் ஆகும் என்று எப்போதும் ஜமாஅத்திற்கு இறுதியில் கூறிவந்தார்கள். எனவே ஒவ்வொரு முறையும் அவர்கள் தோல்வியடைந்து வந்தனர். மேலும், இதனை அந்த காலத்தில் எதிரிகளாக இருந்த அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளார்கள். அதாவது, இன்று (அன்னார் (ரலி) மீது) கைவைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடும்; மேலும், கிளர்ச்சி செய்தல் மற்றும் அமைதியை சீர்குலைத்தல் போன்ற சட்டப்பிரிவுகளில் வழக்குகள் பதிந்து நாம் இன்று அன்னாரை பிடிப்பதற்கு முயற்சி செய்து விடுவோம் என்று அன்னாரின் சொற்பொழிவிற்கு மத்தியில் நாங்கள் கருதி வந்தோம். ஆனால், சொற்பொழிவு தனது நிறைவு கட்டத்தை அடைந்ததும், முற்றிலும் வேறு வடிவில் ஜமாஅத்திற்கு அன்னார் (ரலி) அறிவுரை வழங்குவார்கள். மேலும், சட்டத்திற்கு எதிரான அந்த வேலைகளிலிருந்து அவர்களை அன்னார் (ரலி) தடை செய்து வந்தார்கள். பின்னர் அந்த எதிர் தரப்பு அதிகாரிகளின் திட்டங்கள் தோல்வியடைந்து வந்தன. மேலும், இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரான மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைக்கு முற்றிலும் எதிரான ஒரு பேச்சை அன்னார் (ரலி) பேசுவது என்பதும் எவ்வாறு சாத்தியமாகும்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் ஜமாஅத்திற்கு பொறுமை செய்வதற்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். துஆ செய்வதற்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், எவர்களின் பாதங்கள் மென்மையானவையாக இருக்குமோ மேலும், எவர்களால் என்னுடன் முட்கள் நிறைந்த மற்றும் கரடுமுடான பாதைகளில் நடக்க முடியாதோ மேலும் பொறுமை செய்வதற்கான ஆற்றல் பெற்றிருக்கவில்லையோ அவர் நிச்சயமாக என்னை விட்டு விலகிக் கொள்ளட்டும் என்று அன்னார் (அலை) தெளிவுபடுத்திவிட்டார்கள். (அன்வாருல் இஸ்லாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 9, பக்கம் 23 -24)

இந்த பொறுமை என்ற பண்புதானே

உலகில் ஜமாஅத்தின் தனித்தன்மையை நிலைப் பெறச் செய்துள்ளது.

பல அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் என்னிடமும் கேட்கின்றனர். நான் அவர்களுக்கு பெரும்பாலும் இந்த பதிலையே கொடுக்கின்றேன். அதாவது, எவர்கள் எங்களுக்கு துன்பம் கொடுத்து வருகின்றனரோ அல்லது அநீதியிழைத்து வருகின்றனரோ அவர்களிலிருந்தே அஹ்மதிகளும் வந்துள்ளனர். இவ்வளவு அநீதிகளுக்கு மத்தியிலும் அல்லாஹ்வின் அருளால் அந்த மக்களிலிருந்து எங்களிடம் மக்களும் வருகின்றனர். அவர்களுக்கு இருந்த இயல்பே எங்களிடமும் இருந்தது. எங்களாலும் அவர்களைப் போன்ற எதிர் வினையாற்ற முடியும். ஆனால், நாங்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். அமைதியை நிலைநிலைநாட்டுவதற்காகவும், அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுகளாக ஆகுவதற்காகவும் நீங்கள் பொறுமையை கையாள வேண்டும் என்று அன்னார் (அலை) எங்களுக்கு இவ்வாறு போதனை நல்கியுள்ளார்கள்.

ஆயினும், சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்து கொண்டு உங்களது உரிமைகளை பெறுவதற்காக என்ன முயற்சிகளை செய்ய முடியுமோ அதனை செய்யுங்கள். சில முறை சில விவகாரங்களில் எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாமலயே இறைவனிடம் விவகாரத்தை விட்டுவிடுவதற்கும் அன்னார் (அலை) அறிவுறுத்தியுள்ளார்கள். விவகாரத்தை அல்லாஹ்விடம் விட்டு விடுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்:

இறைவன் சுயமே நமது உதவிக்கு வருவான். மேலும் அவன் வந்துள்ளான்.

எனவே தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். இது நபிமார்களின் வரலாறு ஆகும். நாம் பொறுமையை கை கொள்ள வேண்டும் என்றே நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் போதித்துள்ளார்கள். எவ்வாறு இருப்பினும், இதுவே அமைதியுடன் வாழக்கூடியவர்களின் சரியான எதிர்வினை ஆகும் என்று இதன் மீது மக்கள் ஆச்சரியமும் கொள்கின்றனர். மேலும் இதனை பாராட்டவும் செய்கின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சான்றுகளின் அடிப்படையில் பேசக்கூடியவர்களுக்காக விஷயத்தை மேலும் விளக்கியபடி அன்னாருடைய குத்பாவின் ஒளியிலும் நான் கூற விரும்புகின்றேன்.

அந்த குத்பாவில் அன்னார் (ரலி) பொறுமையின் பொருளை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள்; ஒளிபாய்ச்சியுள்ளார்கள். இன்னும் கூறப்போனால் அதன் பிறகு அன்னார் (ரலி) உயர் நல்லொழுக்கங்கள் தொடர்பான ஒரு குத்பா தொடரையும் வழங்க ஆரம்பித்துவிட்டார்கள். மேலும் அதனையும் பொறுமை என்ற கருத்துடன் இணைத்தார்கள். எவ்வாறு இருப்பினும், அந்த குத்பாவிலிருந்து பயன்பெற்றவாறு நான் சில விஷயங்களை எடுத்துரைப்பேன். அதேபோன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய பொறுமை தொடர்பான விஷயங்களைக் குறித்த அன்னாரின் மேற்கோள்களிலிருந்தும் நான் சான்றுகளை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பொறுமையை மிகவும் இன்றியமையாத ஒரு விஷயமாக குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அன்னார் (ரலி) கூறினார்கள்:

இது நபிமார்களின் ஜமாஅத்துகளுடைய முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் முதன்மையான கடமைகளில் அடங்கும். அதனைத் தவிர்த்து எந்த ஜமாஅத்தும் முன்னேற்றமடையவும் முடியாது. மேலும், உலகத்தை தன்னை பின்பற்றி நடக்கும்படி நிர்பந்திக்கவும் முடியாது. இந்தக் கடமையை செலுத்தாமல் வெற்றி முகத்தை கண்ட எந்த ஒரு ஜமாஅத்தும் இருக்கவில்லை.

பொறுமை இரு வகைப்படும். அன்னார் (ரலி) திருக்குர்ஆன் விளக்கவுரையிலும் இதனை தெளிவுபடுத்தியுள்ளார்கள். அன்னார் (ரலி) செய்துள்ள சில வசனங்களின் விளக்கவுரையில் இதனை எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு பொறுமை என்பது, மனிதனுக்கு எதிர் வினையாற்ற ஆற்றல் இருந்த பிறகும் அவன் பொறுமை காட்டுவது ஆகும். மேலும், இரண்டாவது (வகை) பொறுமை என்பது, மனிதனுக்கு எதிர்ப்பதற்கு ஆற்றலே இல்லாதபோது அவர் காட்டுகின்ற பொறுமை ஆகும். அந்தப் பொறுமை என்பது நிர்பந்தத்தின் பொறுமை ஆகும்.

வலிமை இருந்த பிறகும் பொறுமை செய்வது என்பது இதுவேயாகும். அதாவது, குழப்பங்கள் விளைவிக்கக் கூடியவர்கள் அல்லது அநீதியிழைக்கக் கூடியவர்களுக்கு பதிலடி கொடுக்காமல் இருப்பது ஆகும். எதிரிகள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்களோ அதேபோன்று எதிர்வினையாற்றாமல் இருப்பது ஆகும். மேலும் மிகவும் உச்சபட்ச பொறுமையை அல்லாஹ்விற்காக வெளிப்படுத்துவது ஆகும்.

வலிமை இல்லாமல் இருந்த பிறகும் வெளிப்படுத்தும் பொறுமை உள்ளது. அது விண்ணின் துன்பங்களின்போது அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி கொண்டவாறு பொறுமையும் நன்றியும் செலுத்துவது ஆகும். எவ்வாறு இருப்பினும், உருதுவில் பொறுமை என்பதற்கு பொருள் இதுவே ஆகும். அதாவது அமைதியாகிவிடுவது பொறுமை ஆகிவிட்டது. ஆனால், அரபியில் அதற்கு மிகவும் விரிவான பொருள் உள்ளது. நாம் அரபி மொழியில் பொருளை பார்க்கும்போது, சரியான விஷயம் புரிய வருகின்றது. அதாவது ஸப்ர் எனும் பொறுமை என்பதன் உண்மையான பொருள் என்ன? மேலும் எப்படிப்பட்ட பொறுமையை ஒரு நம்பிக்கையாளர் காட்ட வேண்டும்? என்பது புரிய வருகின்றது.

அல்லாஹ் பல்வேறு இடங்களில் பொறுமை செய்யும்படி வலியுறுத்தியுள்ளான். மேலும், பொறுமை என்ற சொல்லின் உண்மையான பொருள் அல்லாஹ்வின் கட்டளைகளை கருத்தில் கொண்டவாறு அகராதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, ஸபர் என்ற சொல்லிற்கு மூன்று பொருள்கள் உள்ளன.

முதலாவது (பொருள்), பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பது, மேலும் தனது நஃப்ஸை அதிலிருந்து தடுத்து நிறுத்துவது.

இரண்டாவது (பொருள்), நற்செயல்களில் உறுதிப்பாட்டுடன் நிலைத்திருப்பது, மேலும், மூன்றாவது பொருள் என்பது, அழுது புலம்புவதிலிருந்து தவிர்ந்திருப்பது. பொதுவாக உருது மொழியில் இந்தப் பொருளே கொடுக்கப்படுகின்றன.

ஆக, முதலாவது பொருளின் அடிப்படையில் தொடர்ந்து மற்றும் உறுதிப்பாட்டுடன், தன்பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கின்ற அந்த பாவங்களை எதிர்ப்பது மனிதனின் பணியாகும். மேலும், அவனை தன்பக்கம் ஈர்க்கக் கூடிய அந்த பாவங்களை எதிர்காலத்தில் எதிர்ப்பதற்கும் தயாராக இருப்பது ஆகும்.

ஆக, நாங்கள் மிகவும் பொறுமை சாலிகள். கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்துவிட்டோம் என்பது மட்டுமே பொறுமை கிடையாது. மாறாக, நிரந்தரத் தன்மையுடன் தனது உட்புற நிலைகளை சுத்தப்படுத்துவதே அசல் பொறுமை ஆகும். மேலும் எந்த மக்கள் அப்படிப்பட்டவர்களாக இருப்பார்களோ பின்னர் அல்லாஹ் அவர்களின் உதவிக்காக அவர்கள் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத இடத்திலிருந்து வந்துவிடுவான்.

நாம் பொறுமையை கைவிட்டுவிட்டு அவர்களைப் போன்று எதிர் வினையாற்ற வேண்டும் என்று எதிரிகள் விரும்புகின்றனர். அப்போதுதான் அவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெற முடியும். ஆனால், நீங்கள் அறிவுடன் செயல்பட வேண்டும்;மேலும், நீங்கள் எந்த விஷயத்தைக் கூறுகின்றீர்களோ அது அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்புடையதாக உள்ளதா? இல்லையா? மேலும் அதற்கேற்ப நீங்கள் செயல்படுகின்றீர்களா? இல்லையா? என்று உங்களுக்குள் உற்று நோக்க வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு கூறுகின்றான்.

மனிதன் உறுதிப்பாட்டுடன் தனக்கு கிடைத்துவிட்ட அந்த நன்மைகளில் நிலை நிற்க வேண்டும். மேலும், இன்னும் தனக்கு கிடைத்திடாத அந்த நன்மைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பது (ஸபர் என்ற சொல்லின்) இரண்டாவது பொருளின் அடிப்படையில் தெளிவாகிவிடும். இதுவும் பொறுமையின் ஒரு வகையாகும். இதுவும் உண்மையில்

ஒரு மனிதனுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற்றுத் தரக்கூடியதாகும். இது நெருக்கமான வெளிப்பாடாகும். வெளிப்படையான வெளிப்பாட்டுடன் துஆக்களின் மூலமாக கிடைக்கின்றது. இது குறித்து திருக்குர்ஆனில் அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ

وَالصَّلٰوةِ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ

பொறுமை மற்றும் துஆவின் மூலமாக அல்லாஹ்விடம் உதவி வேண்டுங்கள். மேலும் நிச்சயமாக பணிவை மேற்கொள்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு இந்த விஷயம் கடினமானதாகும். (அதிகாரம்-அல்பக்ரா:46)

அல்லாஹ்விற்கு அஞ்சக்கூடியவர்களாகவும், பணிவை மேற்கொள்பவர்களாகவும் எவர்கள் இருப்பார்களோ அவர்களே அல்லாஹ்வின் திருப்தியை விரும்பக்கூடியவர்களாக பொறுமையை வெளிப்படுத்த முடியும்.

அடுத்து, மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்:

وَالَّذِيْنَ صَبَرُوا ابْتِغَآءَ وَجْهِ رَبِّهِمْ وَاَقَامُوا الصَّلٰوةَ وَ

اَنْفَقُوْا مِمَّا رَزَقْنٰهُمْ سِرًّا وَّ عَلَانِيَةً

وَّ يَدْرَءُوْنَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ اُولٰٓئِكَ لَهُمْ عُقْبَى الدَّارِ

தங்கள் இறைவனின் திருப்தியை நாடி, உறுதியாக நின்று செயலாற்றுபவர்களும், தொழுகையினைச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களும் நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் எமது வழியில் செலவு செய்பவர்களும், நன்மையைக் கொண்டு தீமையை அகற்றுபவர்களுமேயாவர். (மறுமை) வீட்டின் மிகச் சிறந்த நற்பலன் இவர்களுக்கே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அர்ரஅத்: 23)

இந்த வீடு, இந்த உலகம் என்பது தற்காலிகமானதாகும். இங்கு கஷ்டங்கள் இருக்கின்றன. (ஆனால்) முடிவின் வீடு இருக்கின்றதே, (அதாவது) மறுமையின் வீடு இருக்கின்றதே அது அல்லாஹ்வின் திருப்தியை விரும்புகின்ற மக்களுக்கே கிடைக்கின்றது.

**எனவே பொறுமை என்பது நிரந்தர மனப்பான்மையுடனும், பணிவுடனும், துஆக்களுடனும் அல்லாஹ்வின் திருப்தியை வேண்டுவதன் பெயர் ஆகும்.** நாம் நமது நிலைமைகளை அல்லாஹ்வின் போதனைக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ளும்போதும், அதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிக்கும்போதும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நோக்கமாக இருக்கும்போதும் இந்த நிலை உருவாகும்.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று பொறுமை என்ற சொல்லின் ஒரு பொருள் அழுது புலம்பாமல் இருப்பது ஆகும். வெளிப்படையான சோதனை, நோய் அல்லது பொருளாதார பாதிப்பு அல்லது வேறு ஏதாவது கஷ்டம் வரும்போது, அச்சமடையவும் கூடாது; மேலும் அல்லாஹ் எனக்கு இப்படி செய்து விட்டானே! என்று முறையீட்டின் வடிவில் கூச்சலிடவும் கூடாது. இந்த விஷயங்கள் பொறுமையின்மையின் அடையாளம் ஆகும்.

அல்லாஹ்விற்கெதிராக முறையீடு செய்வது முற்றிலும் தவறான விஷயம் ஆகும். என்னிடம் உள்ளவையெல்லாம் அல்லாஹ்வின் புறமிருந்து அன்பளிப்பின் வடிவில் உள்ளது; இன்று அல்லாஹ் எடுத்துக் கொண்டான் என்றால் நாளை வழங்கிவிடுவான் என்று எப்போதும் எண்ணம் கொண்டிருக்க வேண்டும். எனவே, இந்த சிந்தனை கொண்டவர்களே உண்மையான நம்பிக்கையாளர்கள் ஆவர். மேலும் இவ்வாறு பொறுமை செய்யக் கூடியவர்களே அல்லாஹ்வின் பார்வையில் உண்மையான பொறுமைசாலிகள் ஆவர்.

ஆக, இவை பொறுமையின் மூன்று பொருள்கள் ஆகும். ஆனால், இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, பொறுமை என்பது எந்தவொரு பலவீனத்தின் காரணமாகவோ, அச்சத்தின் காரணமாகவோ இருத்தல் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் பின்னர் அதுவே அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடிய உண்மையான பொறுமை ஆகும்.

ஒரு நபர் உயர் அதிகாரிக்கு முன்பு அல்லது அரசருக்கு முன்பு அவரது அநீதியின் காரணமாக அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க மௌனமாக இருக்கின்றார் என்றால் பின்னர் அது உண்மையான பொறுமையாகும். மேலும் ஒருவேளை அவர் உயிர் பயத்தின் காரணமாக (அவர் மௌனமாக இருக்கின்றார்) என்றால் பின்னர் அது தவறான விஷயம் ஆகும்.

நாம் பொறுமை செய்வதற்கு வலியுறுத்துவது என்பது இது அல்லாஹ்வின் கட்டளையாகும் என்பதால் மட்டுமே ஆகும். பழிவாங்கவே வேண்டும் என்றால் பின்னர், நாங்கள் எங்கள் உயிரையும் பொருட்படுத்தவில்லை என்று பல அஹ்மதிகள் உத்வேகத்தால் நிறைந்து அமர்ந்திருப்பார்கள். நாம் பழிவாங்கி ஒருமுறை அநீதியாளர்களுக்கு தண்டனையை சுவைக்க செய்ய முடியும்; சுவைக்க செய்துவிடுவோம். ஆனால், நாம் இதனை செய்ய மாட்டோம். இது நமக்கு வழங்கப்பட்ட போதனைக்கு எதிரானதாகும். நாம் அதுபோன்ற செயல்பாடுகளை வெறுக்கின்றோம். ஏனெனில், இது நபிமார்களின் ஜமாஅத்துகளுக்கு அழகு சேர்ப்பதில்லை. மேலும், நாம் பைஅத் உடன்படிக்கையில், மனித குலத்திற்கு எந்த தீங்கும் இழைக்க மாட்டோம் என்று உடன்படிக்கை செய்துள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மை கடுமையாக இந்த விஷயங்களிலிருந்து தடுத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பொறுமை தொடர்பாக இந்த ஒரு விளக்கத்தையும் வழங்கியுள்ளார்கள்:

இதனையும் நினைவிற் கொள்ளுங்கள்! அதாவது, பொறுமை மற்றும் தன்மானம் அற்றத் தன்மைக்கிடையில் உங்களது செயல் மூலமாக தெளிவான வித்தியாசம் தென்பட வேண்டும். உதாரணமாக, ஒரு நபர் தனது தேவைக்காக ஒருவரிடத்தில் பணம் கேட்கச் செல்கின்றார் மேலும், அந்த நபர் அவரை ஏசிபேசுகின்றார் மேலும் வெட்கமற்றவர் என்று கூறி அவரை மிகவும் அவமானப்படுத்தினால் பணம் கேட்பவர் சிரித்துக் கொண்டு அவரது கூற்றை சமாளித்துக் கொண்டு, இந்த நேரத்தில் நான் தேவையுடையவனாக இருக்கின்றேன். எனவே இவரது ஏச்சுப் பேச்சுக்களை நான் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணம் கொண்டால் பின்னர் இது வெட்கமின்மையும், சுயமரியாதை அற்றத் தன்மையும் ஆகும். ஆனால், சிலநேரம் சமுதாய மற்றும் மார்க்க நோக்கங்களுக்காக பொறுமை செய்ய நேரிடும். (அதுபோன்ற இடங்களில்) அமைதி காக்கவும் நேரிடும். இந்த பொறுமை சுயநலத்திற்காக இருப்பதில்லை. எனவே இது உண்மையான பொறுமை ஆகும். மேலும் இது வெட்கமற்றத் தன்மை கிடையாது. உதாரணமாக, எங்கு பழிவாங்குதலின் காரணமாக அவரது சமுதாயத்தின் மீது ஏதாவது துன்பம் வரும் இடத்தில், அவர் தாக்குதல் நடத்துகின்றார் என்றால் பொறுமை செய்வதில்லை என்றால் பின்னர் அவரை முட்டாள் என்று கூறுவோம். ஏனெனில், இவ்வாறு அவர் தனது சமுதாயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றார். எனவே அவர் தனது சமுதாய நலனிற்காக பழிவாங்கவில்லை என்றால் அல்லது உலகியல் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்காக பொறுமை செய்கின்றார் என்றால் பின்னர் அவரது இந்த பொறுமை (உள்ளபடியே) பொறுமை என்று கூறப்படும்.

எனவே இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். இன்ன நபரை போலீஸ் கைது செய்துவிட்டது. எனவே கூட்டத்தை ஒன்றுகூட்டி, ஊர்வலம் நடத்துங்கள் என்று சில நபர்கள் உணர்ச்சிவயப்பட்டு விடுகின்றனர். இவை அனைத்தும் தவறான விஷயங்கள் ஆகும். இவ்வாறான எதிர் வினை வெளிப்படட்டும். அதனால் நாம் இன்னும் அதிகமாக கடுமை காட்டலாம்; ஏற்கனவே எதிரிகளாக இருக்கும் அந்த அதிகாரிகளை நம்முடன் இணைந்துக் கொண்டு அஹ்மதிகளை நாம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடலாம்; அவர்களின் அமைப்பின் மீது கூடுதல் தடைகளை விதிக்க முயற்சி செய்யலாம் அல்லது அதற்கு அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்கலாம் என்றே எதிரி விரும்புகின்றான். அதேநேரம் குறிப்பாக அரசாங்கத்தின் சில அதிகாரிகளும் இன்னும்கூறப்போனால் பெரும்பான்மையினர் நமக்கு எதிராகவே உள்ளனர். அரசாங்கத்தின் சில அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவளித்தும்

வருகின்றனர். மேலும், பின்னர் அதுபோன்ற சந்தர்ப்பங்களிலிருந்து நயவஞ்சகர்களும் பயனடைகின்றனர். மேலும், அங்கு அதுபோன்ற சந்தர்ப்பங்களில் இதுபோன்ற எதிர்வினை நிகழும்போது நிலைமை மோசமடைந்ததை நாம் கண்டோம்; மோசமடையவேச் செய்யும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இதுபோன்ற எதிர்வினை வெளிப்பட்டபோது நிலைமை மோசமடைந்ததையே அனுபவத்தில் பார்க்கப்பட்டுள்ளது. சில அதுபோன்ற சம்பவங்கள் ஜமாஅத்தின் வரலாற்றில் உள்ளன. அதனால் நன்மைக்கு பகரமாக பாதிப்பே ஏற்பட்டுள்ளது. பொறுமையை வெளிப்படுத்தியவாறு நிலைமையை சீர்படுத்துவதற்காக சட்ட ரீதியான முயற்சிகள் செய்யப்பட்டபோது நூறு சதவிகிதம் இல்லாவிட்டாலும் ஏராளமான இடங்களில் அதனால் நன்மையும் கிடைத்துள்ளது.

நாமும் இதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவோம். தவறான எதிர்வினை நம்மிடமிருந்தும் வெளிப்படக்கூடும் அல்லது நம்மில் சில நபர்களிடமிருந்து வெளிப்படக்கூடும் ஆனால் நாம் செய்ய மாட்டோம் என்ற இந்த தூதுச் செய்தியை நாம் எவ்வாறிருப்பினும் எட்ட வைக்கின்றோம். இது இஸ்லாமிய போதனைக்கு எதிரானதாகும். மேலும், மெது மெதுவாக சில அதிகாரிகள் மீது இதன் நேர்மறை தாக்கமும் ஏற்பட்டுள்ளது. அதுபோன்ற சில விஷயங்கள் நமது அனுபவத்தில் கிடைத்துள்ளன. ஏச்சுப்பேச்சுக்கள் மற்றும் அடிதடிகளுக்கு பதிலடியாக அடிதடியில் ஈடுபடத் துவங்கிவிட்டால் பின்னர் நமது தப்லீக்கின் கீழ் இருப்பவர்கள் மீது நாம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பகரமாக எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருப்போம். பின்னர் (அந்நிலையில்) நாங்கள் இவர்களுடன் இணைந்து கொள்வதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி இவர்களிடத்தில் என்ன நேர்மறை மாற்றத்தை ஏற்படுத்திவிட்டார்? என்று கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது.

(அஹ்மதிகளாகிய) அவர்களின் எதிரிகளின் நடவடிக்கை எவ்வாறு உள்ளதோ அதேபோன்றுதானே எதிரிகளுடன் இவர்களுடைய நடவடிக்கையும் உள்ளது.

நபிமார்களின் நடைமுறையும், நபிமார்களின் ஜமாஅத்துகளின் நடைமுறையும் என்னவென்றால், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவும், (அவனது) தூதரின் கட்டளைக்கேற்பவும் அவர்கள் பொறுமை மற்றும் துஆவினைக் கொண்டு செயல்படுகின்றனர். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இந்த போதனையையே வழங்கியுள்ளார்கள்.

ஆக, இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, நாம் ஜமாஅத்தின் பரந்துபட்ட நன்மைகளைக் கருத்தில் கொண்டு தற்காலிக மற்றும் சிறிய துன்பங்களை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இதனையும் கூறியுள்ளார்கள்: நமக்கு சில முறை சட்டத்தின் கதவைத் தட்டுவதற்கும் அவசியம் இல்லை. கடுமை காட்டப்படும்போது பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது நூல்களில் சில கடுமையான சொற்களை பயன்படுத்தியுள்ளார்கள்; எனவே நாமும் செய்யலாம் என்று மக்கள் கூறக்கூடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அதுபோன்ற மக்கள் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ் மற்றும் அவனது நபிமார்களின் மேன்மை வேறொன்றானதாகும். உலகியல் உதாரணங்களில் நாம் அதனைப் பார்க்கின்றோம். எடுத்துக்காட்டாக, ஒரு மேஜிஸ்திரேட் அல்லது நீதிபதி இருக்கின்றார். அவர் குற்றவாளியை திருடர் என்று கூறுகின்றார் என்றால் அது அவரது பணியாகும். மேலும், அது அவரது உரிமையாகும். மேலும், இந்த அடிப்படையில் அவர் அவருக்கு தண்டனை வழங்குகின்றார். மேலும், அந்த நபரின் சீர்திருத்தத்திற்காக அவர் முயற்சி செய்கின்றார். ஆனால், ஒருவர் மற்றவரை திருடன் அல்லது குற்றவாளி என்று கூறிக் கொண்டு திரிவது எல்லாரின் பணி கிடையாது. ஒருவர் அவ்வாறு கூறினால் பின்னர் அதனால் குழப்பம் உருவாகும். ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மக்களின் பலவீனங்களை வெளிப்படுத்தி அவற்றை சுட்டிக் காட்டுகின்றார்கள் என்றால் அது மக்களின் சீர்திருத்தத்திற்காகவும், மக்களுடைய தவறான கொள்கைகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காகவும் அதனை செய்துள்ளார்கள். ஆனால், அன்னாரைப் பற்றிய கேள்வியைப் பொருத்தவரை தம்மைக் குறித்து அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டுவிட்டு அந்த மக்களுக்காக துஆக்கள் செய்கின்றேன்.

கருணை உத்வேகத்தில் உள்ளது. நாம் கோபத்தை தணித்துக் கொண்டோம்.

மேலும், பிறரின் கடுமைகளை பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள் என்ற போதனையையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உதாரணம் வழங்கியவாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் லாஹூர் வண்டியில் அமர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். நகரத்தின் குண்டர்கள் அன்னார் (அலை) மீது கற்களை வீசிக் கொண்டிருந்தார்கள். அவை அன்னாரின் வண்டியின் மீது வந்து விழுந்து கொண்டிருந்தன. குதிரை வண்டியாக அது இருந்தது. பூட்டப்பட்டிருந்தது. எனினும்,ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முகம் சுளிக்கவில்லை. எதிரிகள் செய்து கொண்டிருந்ததைக் கண்டு கோபமடையவில்லை. ஜன்னல் உடைந்து சில கற்கள் உள்ளேயும் வந்து கொண்டிருந்தன. அன்னார் (அலை) வெளிப்படுத்திய பொறுமையின் தாக்கம் என்னவாக இருந்ததென்றால், அந்த மக்களில் இருந்து நூற்றுக்கணக்கான நபர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிமைத்துவத்தில் இணைந்து கொண்டே சென்றனர். எனவே, இந்த நல்லொழுக்கத்தை நாம் இன்றும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

ஒருவர் எதிர்ப்பில் சுயநலம், உள்ளத்தின் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் முன்னேறியுள்ளார் என்றால், பின்னர் அல்லாஹ் சுயமே அவரை பழிவாங்குவான். நிபந்தனை என்னவென்றால் நாம் பொறுமையுடனும், துஆவுடனும் செயல்பட வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் பல மக்கள் அன்னார் (ஸல்) அல்லது ஸஹாபிகளின் பொறுமை மற்றும் தைரியத்தைப் பார்த்தே இஸ்லாத்தை தழுவி வந்தனர். மேலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்தது போன்று இக்காலத்திலும் நமக்கு அதற்கான உதாரணங்கள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் அன்னாருடைய பொறுமையைக் கண்டு மக்கள் ஜமாஅத்தில் இணைந்து வந்தனர். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 9, பக்கம் 130-140)

மேலும் இன்றும், தற்போதும் நாம் பார்க்கின்றோம். ஏராளமான மக்கள் ஜமாஅத்தின் இதே வரலாற்றைப் பார்த்து ஜமாஅத்தில் இணைகின்றனர் என்று சில கடிதங்கள் எனக்கு பல்வேறு நாடுகளிலிருந்து வருகின்றன.

ஜமாஅத்திற்கு பொறுமை செய்யும்படி அறிவுரை வழங்கியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பொறுமை மாபெரும் ஆபரணம் ஆகும். எந்த நபர் பொறுமை செய்யக்கூடியவராக இருக்கின்றாரோ மேலும் கோபத்தால் நிறைந்திருந்தும் பேசுவதில்லையோ அவரது பேச்சு அவருடைய பேச்சாக இருப்பதில்லை. மாறாக, இறைவன் அவரை பேச வைக்கின்றான். ஜமாஅத் பொறுமையைக் கைகொள்ள வேண்டும். மேலும், எதிரிகளின் கடுமையைக் கண்டு பதிலுக்கு கடுமை காட்டக் கூடாது. மேலும், ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டுவிட்டு பதிலுக்கு ஏசிபேசக் கூடாது. எம்மை பொய்ப்படுத்துகின்ற ஒருவர் மரியாதையுடன் பேசவேண்டும் என்பது அவருக்கு கட்டாயமல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரை கண்ணியத்துடன் கூறவேண்டும் என்பது அவசியமில்லை.

கூறுகின்றார்கள்: அதற்கான உதாரணங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் ஏராளமான காணக் கிடைக்கின்றன. பொறுமை போன்ற விஷயம் வேறெதுவும் இல்லை. ஆனால், பொறுமை செய்வது என்பது மிகவும் கடினமாகும். பொறுமையைக் கைகொள்பவருக்கு அல்லாஹ் உதவி செய்கின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 200, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பின்னர், ஜமாஅத்தின் நிலைமையின் சித்திரத்தை வடித்தவாறு மற்றும், புதிதாக வரக்கூடியவர்களின் கஷ்டங்களைக் குறிப்பிட்டவாறு பொறுமை செய்யும்படி அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டு வந்த கஷ்டங்களைப் போன்று நமது ஜமாஅத்திற்கும் கஷ்டங்கள் உள்ளன. ஆக, புதிய மற்றும் எல்லாவற்றையும் விட முதலாவது துன்பம் இதுவே ஆகும். அதாவது, ஒரு நபர் இந்த ஜமாஅத்தில் நுழைகின்றார் என்றால் உடனடியாக அவரது நண்பர்களும், உறவினர்களும், அன்பர்களும் விலகிவிடுகின்றனர். எந்த அளவிற்கு என்றால், சில நேரத்தில் தாய், தந்தையரும், சகோதர சகோதரிகளும், எதிரிகளாகிவிடுகின்றனர். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூட கூறுவதில்லை. மேலும் ஜனாஸா தொழ விரும்புவதில்லை. இதுபோன்ற ஏராளமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் அறிவேன். சில பலவீனமான இயல்பு படைத்த நபர்களும் இருக்கின்றனர். அவர்கள் இதுபோன்ற கஷ்டங்களைக் கண்டு பதற்றமடைந்து விடுகின்றனர். ஆனால், நினைவிற் கொள்ளுங்கள். இதுபோன்ற கஷ்டங்கள் வருவது அவசியம் ஆகும். நீங்கள் நபிமார்கள் மற்றும் தூதர்களை விட உயர்ந்தவர்கள் கிடையாது. அவர்கள் மீதும் இதுபோன்ற கஷ்டங்களும், துன்பங்களும் வந்துள்ளன. மேலும், இறைவன் மீதான ஈமான் வலிமை பெறுவதற்கே இதுபோன்ற துன்பங்கள் வருகின்றன. ஈமானின் உறுதிப்பாட்டிற்கு இந்த கஷ்டங்கள் வருகின்றன. தூய மாறுதல்களுக்கான சந்தர்ப்பம் கிடைப்பதற்காக இவை வருகின்றன. துஆக்களில் ஈடுபட்டு கொண்டிருப்பதற்காக இவை வருகின்றன.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

எனவே, நீங்கள் நபிமார்கள் மற்றும் தூதர்களைப் பின்பற்றி நடப்பதும், பொறுமையின் வழிமுறைகளை மேற்கொள்வதும் அவசியம் ஆகும். உங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

நீங்கள் உண்மையை ஒப்புக் கொண்ட காரணத்தால் உங்களை விட்டு விலகிய நண்பர் உண்மையான நண்பர் கிடையாது. அவர் உண்மையான நண்பராக இருந்திருந்தால் அவர் உங்களுடன் இருந்திருக்க வேண்டும். நீங்கள் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்தில் இணைந்துவிட்டீர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் உங்களை கைவிட்டுவிடுகின்ற மற்றும் உங்களிடம் இருந்து விலகிவிடுகின்ற அந்த மக்களிடம் நீங்கள் எந்த சச்சரவும், குழப்பமும் செய்ய வேண்டாம். மாறாக, அவர்களுக்காக மறைமுகமான துஆக்கள் செய்யுங்கள். சண்டையிடாமல் இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. மாறாக, அல்லாஹ் தனது அருளால் உங்களுக்கு வழங்கிய அகப்பார்வை மற்றும் ஞானத்தை அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று நீங்கள் அவர்களுக்காக துஆவும் செய்ய வேண்டும்.

ஆக, சச்சரவு மற்றும் குழப்பத்திலிருந்து மட்டும் தடுக்கவில்லை. மாறாக, துஆக்கள் செய்யும்படி கூறியுள்ளார்கள். உள்ளத்தில் அனுதாபம் கொள்ளும்படி கூறியுள்ளார்கள். அப்போதுதான் அவர்கள் உண்மையை அடையாளம் காண்பவர்களாக ஆக முடியும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: உங்களது தூய முன்மாதிரியாலும், அழகிய நடத்தைகளாலும் நீங்கள் நல்ல வழியை மேற்கொண்டுள்ளீர்கள் என்று நீங்கள் நிரூபணம் செய்து காட்ட வேண்டும்.

பாருங்கள்! (நீங்கள்) எல்லா வகையான குழப்பங்கள் மற்றும் சச்சரவிற்குரிய இடங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும்; மேலும் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்ட பிறகும் பொறுமை செய்ய வேண்டும் என்று உங்களுக்கு மீண்டும், மீண்டும் வழிகாட்டுவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். தீமைக்கான பதிலை நன்மையின் மூலம் வழங்குகுங்கள். ஒருவர் குழப்பம் விளைவிக்க ஆயத்தமாக இருக்கின்றார் என்றால் நீங்கள் அந்த இடத்திலிருந்து நழுவி(ச் சென்று) விடுங்கள்.

அங்கிருந்து விலகிச் சென்று விடுங்கள்; மேலும் மென்மையுடன் பதில் கொடுங்கள் என்று திருக்குர்ஆனிலும் இந்தக் கட்டளை உள்ளது. மேலும், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும்,

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

மீண்டும் நிகழ்கின்றன. அதாவது, ஒரு நபர் மிகவும் உணர்ச்சிப் பொங்க எதிர்க்கின்றார். மேலும், குழப்பத்தின் வழிமுறைகளாக இருக்கும் வழிமுறைகளை அவர் எதிர்ப்பில் மேற்கொள்கின்றார். மேலும் எப்படிப்பட்ட எதிர்ப்பை அவர் செய்கின்றார் என்றால் அதனால் குழப்பம் உருவாகும் அபாயமும் இருக்கின்றது.

அதாவது, அதனால் செவிமடுப்பவர்களை கிளர்ந்தெழச் செய்யும் வழிமுறையாக அது அமைகின்றது. ஆனால், அவருக்கு மென்மையுடன் பதில் கொடுக்கப்படும்போதும், ஏச்சுப் பேச்சுக்களைப் புறந்தள்ளிவிடும்போதும் அவருக்கு சுயமே வெட்கம் ஏற்பட்டு விடுகின்றது.

இக்காலத்தில் ஏராளமான மக்கள் வெட்கங் கெட்டவர்களாக இருக்கின்றனர் என்பது உண்மைதான். மேலும், தொடர்ந்து அநீதியும் இழைக்கின்றனர்தான். வெட்கப்படக் கூடிய மக்களும் இருக்கின்றனர். அவர்கள் தமது செயல்களில் வெட்கமடைந்து வருத்தப்படவும் செய்கின்றனர்.

முந்தைய குத்பாக்களில் நான் பங்களாதேஷின் சம்பவங்களை எடுத்துரைத்தவாறு ஓர் உதாரணத்தையும் வழங்கியிருந்தேன். அதாவது, கலகக்காரர்களுடன் வந்திருந்த ஒரு சிறுவனிடம், நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய் என்று உனக்கும் தெரியுமா? யார் பெயரால் இதனை செய்கின்றீர்கள் என்று உனக்கு தெரியுமா? என்று நமது ஓர் இளைஞர் கேட்டார். அப்போது, அந்தச் சிறுவனுக்கு விஷயம் புரிந்துவிட்ட பிறகு அவன் செங்கலை கீழே வீசிவிட்டான். அல்லது அவன் வைத்திருந்த கல்லை கீழே வீசிவிட்டான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் உங்களுக்கு மெய்யாகவே கூறுகின்றேன். (நீங்கள் ஒருபோதும்) பொறுமையை கைவிட்டுவிடாதீர்கள். பொறுமையின் ஆயுதம் எப்படிப்பட்ட ஆயுதம் என்றால் துப்பாக்கியால் நடைபெறமுடியாத பணி பொறுமையினால் நடைபெற்று விடுகின்றது. உள்ளத்தை வெற்றிக் கொள்ளக் கூடியது பொறுமையே ஆகும்.

நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள். இன்ன நபர் ஜமாத்தில் இருந்து கொண்டு ஒருவருடன் சண்டையிட்டுள்ளார் என்ற விஷயத்தை நான் கேள்விப்படும்போது எனக்கு மிக அதிகமாக வேதனை ஏற்படுகின்றது. நான் இந்த வழிமுறையை ஒருபோதும் விரும்புவதில்லை. மேலும், உலகில் ஓர் உதாரணமாக திகழ இருக்கின்ற அந்த ஜமாஅத் இறையச்சமற்ற வழிகளை மேற்கொள்வதை இறைவனும் விரும்புவதில்லை. இன்னும் கூறப்போனால், நான் உங்களுக்கு

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இதனையும் கூறிவிடுகின்றேன். அல்லாஹ் இந்த அளவிற்கு இந்த விவகாரத்தை ஆதரிக்கின்றான். அதாவது, ஒரு நபர் இந்த ஜமாஅத்தில் இருந்து கொண்டு பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையை மேற்கொள்ளவில்லையென்றால்,பின்னர் அவர் நினைவிற் கொள்ளட்டும்.அவர் இந்த ஜமாஅத்தில் இணைந்தவர் அல்ல.

(இது) மிகப் பெரிய எச்சரிக்கையாகும். இதனை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: என்னை அசிங்கமாக ஏசி பேசுகின்றனர் என்ற காரணத்தினாலேயே உங்களுக்கு ஆத்திரமும், உத்வேகமும் ஏற்படக் கூடும். அதனால் தான் உங்களுக்கு கோபம் வருகின்து அல்லவா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை அசிங்கமாக ஏசி பேசுகின்றனர். அதனால் உங்களுக்கு கோபம் வந்துவிடுகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்: நீங்கள் இந்த விஷயத்தை இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். நீங்கள் அதற்கு தீர்ப்பு வழங்க முடியாது. என்னுடைய விவகாரத்தை இறைவனிடம் விட்டுவிடுங்கள். அசுத்தமான ஏச்சுப் பேச்சுகள் நிறைந்த கடிதங்கள் அதிகமாக நமக்கு வருகின்றன. மேலும், திறந்த தபால் அட்டைகளில் ஏச்சுப் பேச்சுகள் வழங்கப்படுகின்றன. பதிவுத் தபால்களும் வருகின்றன. அதனை பெறவேண்டிய நிர்பந்தமும் ஏற்படுகிறது. தபால்தலைகள் ஒட்டாமல் கடிதம் அனுப்பிவிடுகின்றனர். அதனால் தபால் தலைகளுக்கான பணமும் கொடுக்க நேரிடுகின்றது. மேலும் பின்னர் அதனை திறந்து படிக்கும்போது, ஏச்சுப் பேச்சுகள் நிறைந்திருக்கின்றன. ஆபாசமான ஏச்சுப் பேச்சுகள் அதில் செய்யப்படுகின்றன. நான் நன்றாக அறிவேன். எந்த இறைத் தூதருக்கும் இப்படிப்பட்ட ஏச்சுப் பேச்சுகள் கொடுக்கப்பட்டிருக்காது. மேலும், அபூஜஹைலிடம் கூட அப்படிப்பட்ட ஏச்சுப்பேச்சுகளுக்கான தன்மை இருந்திருக்கும் என்று நான் நம்பவில்லை.

இவர்கள் எவ்வாறு ஏச்சுப் பேச்சுகளை கையாளுகின்றனரோ அவ்வாறு அபூஜஹைல் கூட ஏசி பேசியிருக்க மாட்டான்.

ஆனால், இவை அனைத்தையும் கேட்க நேரிடுகின்றது. நான் (அவற்றின் மீது) பொறுமை செய்கின்றபோது நீங்களும் பொறுமை செய்வது உங்கள் மீது கடமையாகும். கிளை மரத்தை விட பெரியதாக இருக்க முடியாது.

தமது விவகாரத்தில் அன்னாரிடம் உச்சபட்ச பொறுமை இருந்தது என்று அன்னார் (அலை) தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) கூறியதுபோன்று அன்னாரிடம் உச்சபட்ச பொறுமை இருந்தது. ஆம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடுமை காட்டினார்கள் என்று மக்கள் கூறுகின்றனர். அன்னார் (அலை) கடுமை காட்டினார்கள் என்றால் அது மக்களின் சீர்திருத்தத்திற்காக இருந்தது. மேலும், இந்த அதிகாரம் அல்லாஹ்வின் புறமிருந்து அன்னாருக்கு கிடைத்துள்ளது. எல்லாருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. மேலும், அதிகாரம் இல்லாதபோது பின்னர் நாம் அதுபோன்ற விஷயங்களைப் பேசினால் பின்னர் அதனால் சீர்திருத்தத்திற்கு பகரமாக குழப்பம் பரவுவதற்கும், அதிகரிப்பதற்கும் அதிக சாத்தியம் உள்ளது.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவர்கள் எதுவரை ஏசி பேசுவார்கள் என்று நீங்கள் பாருங்கள்! இறுதியில் அவர்களே சோர்வடைந்து விடுவார்கள். அவர்களின் ஏச்சுப் பேச்சுகளும், அவர்களின் தீங்குகளும், திட்டங்களும் என்னை ஒருபோதும் சோர்வடையச் செய்ய முடியாது.

எனவே நாம் சோர்வடைந்து விடக் கூடாது.

நான் இறைவன் புறமிருந்து தோன்றாமல் இருந்திருந்தால் பின்னர் நிச்சயமாக நான் அவர்களின் ஏச்சுப் பேச்சுகளுக்கு அஞ்சியிருப்பேன். ஆனால், நான் நிச்சயமாக அறிகின்றேன். அதாவது என்னை இறைவன் தான் அனுப்பியுள்ளான். அவ்வாறிருக்க இதுபோன்ற இலகுவான விஷயங்களை நான் எப்படி பொருட்படுத்துவேன்? இது ஒருபோதும் நடக்காது. அவர்களின் ஏச்சுப் பேச்சுகள் யாருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன? அவர்களுக்கா? அல்லது எனக்கா? என்று நீங்கள் சுயமே சிந்தித்துப் பாருங்கள். அவர்களின் ஜமாஅத் குறைந்துள்ளது. எனது ஜமாஅத் வளர்ந்துள்ளது.

ஜமாஅத் வளர்ந்து கொண்டிருக்கின்றதே! அது அந்த மக்களில் இருந்து வந்து கொண்டிருக்கின்றவர்களால் தானே!

(அவர்களின்) இந்த ஏச்சுப் பேச்சுகள் ஏதாவது தடையை உருவாக்க முடியும் என்றால் பின்னர் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான கூட்டம் எப்படி உருவாகி விட்டது?

அன்னார் (அலை) இந்த விஷயத்தைக் கூறிய அந்தக் காலத்தில் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சம் ஆகும். மேலும், இன்று அல்லாஹ்வின் அருளால் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துவிட்டது. மேலும், ஜமாஅத் நிலைபெற்றுவிட்டது. இது (நமது) ஏதாவது எதிர் நடவடிக்கை மற்றும் (நமது) வலிமையின் வெளிப்பாட்டால் நிகழ்ந்துள்ளதா என்ன? இல்லை! மாறாக, தியாகங்கள், பொறுமை மற்றும் துஆக்களின் விளைவாகும்.

எனவே அந்த பெரும் நோக்கத்தை அடைவதற்காக நாம் பொறுமையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த மக்கள் அவர்களிலிருந்தே வந்துள்ளனரா? அல்லது வேறு எங்கிருந்தோ வந்துள்ளார்களா? அவர்கள் எனக்கெதிராக (குஃப்ர் எனும்) நிராகரிப்பிற்கான ஃபத்வாக்களை வழங்கினர். ஆனால் அந்த மார்க்கத் தீர்ப்பினால் என்ன தாக்கம் ஏற்பட்டது? இந்த ஜமாஅத் (உலகியல்) திட்டங்கள் தீட்டப்படுவதன் மூலம் செயல்படக் கூடியதாக இருந்திருந்தால் பின்னர் இந்த மார்க்கத் தீர்ப்பின் தாக்கம் ஏற்படுவது அவசியமானதாக இருந்தது. மேலும், எனது வழியில் அந்த குஃப்ர் ஃபத்வா பெரும் தடையை உருவாக்கியிருக்கும். ஆனால், எந்த விஷயம் இறைவன் புறமிருந்து அமைந்திருக்குமோ அதனை அழிப்பதற்கு மனிதன் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. எனது எதிரிகள் என்னவெல்லாம் சதித் திட்டங்கள் தீட்டிக் கொண்டு செல்கின்றனரோ, அடையாளம் காணக்கூடியவர்களுக்கு (அதனால்) ஏக்கமே ஏற்படுகின்றது.

நான் தெளிவுபட கூறுகின்றேன். என்னை எதிர்க்கின்ற இந்த மக்கள் தனது முழு வேகத்துடன் பாய்ந்து வந்து கொண்டிருக்கின்ற ஒரு மகத்துவ மிக்க நதியின் முன்னால் தனது கரத்தை நீட்டுகின்றனர். மேலும், அதன் மூலம் அதனை தடுத்துவிட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

தண்ணீர் நதியின் வடிவில் ஒரு flow-உடன் வந்து கொண்டிருக்கின்றது. (ஆனால்) அவர்களோ தனது கையை வைத்து விட்டால் தண்ணீர் தடைபட்டு விடும் என்று கருதுகின்றனர்.

ஆனால், இதனால் அதனை தடுத்தி நிறுத்திவிட முடியாது என்பது அதன் வெளிப்படையான விளைவாகும்.

இவர்களோ இந்த ஏச்சுப் பேச்சுகளால் தடுத்துநிறுத்த விரும்புகின்றனர். ஆனால், நினைவிற் கொள்ளுங்கள். ஒருபோதும் தடைபடாது. ஏசிபேசுவது கண்ணியமிக்கவர்களின் பணியா என்ன ? நான் அப்படிப்பட்ட முஸ்லிம்கள் மீது வேதனை கொள்கின்றேன். கட்டுப்பாடற்ற வகையில் பேசுகின்ற இவர்கள் எத்தகைய முஸ்லிம்கள் ஆவர்?

பாகிஸ்தானில் அவர்களின் ஊர்வலங்களில் பல விநோதமான ஏச்சுப்பேச்சுக்களை செய்கின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். முஸ்லிம்கள் என அழைக்கப்படும் இந்த முஸ்லிம்களிடமிருந்து நான் கேட்ட இதுபோன்ற அசுத்தமான ஏச்சுப் பேச்சுகளை நான் மிக இழிவான மக்களிடமிருந்து கூட கேட்டதில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த ஏச்சுப் பேச்சுகளின் மூலம் இந்த மக்கள் தங்களது நிலையை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் மூளை எவ்வாறு உள்ளது? அவர்களின் செயல் எவ்வாறு உள்ளது? என்பது அவர்களின் ஏச்சுப்பேச்சுக்களிலிருந்தே வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேலும், அவர்கள் தீயவர்கள் மற்றும் கயவர்கள் என்பதை (அவர்களே) ஒப்புக் கொள்கின்றனர். இறைவன் அவர்களின் கண்களை திறப்பானாக. மேலும், அவர்களின் மீது கருணை செய்வானாக. (ஆமீன்).

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: அவ்வாறு ஏசிபேசக் கூடியவர்களாக ஒருகோடி மக்கள் இருந்தாலும் சரியே! அவர்களால் இறைவனுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. ஒரு பைசா தபால் அட்டைதானே வீணாகும் என்று கருதுகின்றனர். ஆனால், இந்த பைசாவின் நஷ்டத்துடன் அவர்களின் செயல் ஏடும் கருமையாகிவிடும் என்பதை அவர்கள் அறிவதில்லை.

தபால் அட்டைகளில் அவர்கள் எழுதுகின்ற அசுத்தமான ஏச்சுப் பேச்சுகளால் அவர்கள் தங்களது செயல் ஏடுகளை கருமையாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்து, இவ்வாறு ஏன் ஏசிப் பேசுகின்றனர்? என்று எனக்கு புரியவில்லை. திருக்குர்ஆனை கைவிட்டுவிடாதீர்கள் ; மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்தாதீர்கள் என்று நான் கூறுகின்றேன் என்பதால் மட்டுமே என்னை ஏசிபேசுகின்றனரா? (எனக்கு புரியவில்லை).

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்துவிட்டார்கள். மீண்டும் பூமியில் இறங்கி வர மாட்டார்கள் என்று திருக்குர்ஆனில் எழுதுப்பட்டுள்ளது என்பது ஆச்சரியத்திற்குரியதாகும். ஆனால், இவர்கள் ஒப்புக் கொள்வதற்கு தயாராக இல்லை. மேலும், அவர்கள் திருக்குர்ஆனுக்கு எதிரான கொள்கையில் இருக்கின்றனர். நான் வராமல் இருந்திருந்தால் மேலும், இறைவன் ஒரு ஜமாஅத்தை நிறுவாமல் இருந்திருந்தால் பின்னர் இவர்கள் என்ன விரும்புகின்றார்களோ அதை பேசிக் கொண்டிருக்கலாம். ஏனெனில், அந்நிலையில் அவர்களை எச்சரிக்கக் கூடியவரும், அவர்களுக்கு எடுத்துக் கூறுபவரும் அவர்களிடம் இல்லாமல் இருந்திருப்பார். ஆனால், தற்போது இறைவனோ என்னை தூதராக ஆக்கி அனுப்பியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரை ஹகம் எனும் நீதிநெறி தீர்ப்பவராக ஆக்கியுள்ளார்களோ அவர் நானே ஆவேன். அவ்வாறிருக்க எனது தீர்ப்பிற்கு எதிராக தர்க்கம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. இறையச்சத்திற்கான வழிமுறை என்னவென்றால் அவர்கள் எனது பேச்சை கேட்டு, அதனை சிந்தித்து இருக்க வேண்டும். நிராகரிப்பதற்கு அவசரப்பட்டிருக்கக் கூடாது.

நான் மெய்யாகவே கூறுகின்றேன். நான் வந்துவிட்ட பிறகு இவ்வாறு பேசுவதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஏனெனில், நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன். மேலும், நீதிநெறி தீர்ப்பவராக வந்துள்ளேன். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 203 - 206, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையால் பொறுமைக்கான எந்த தரத்தை நிலைநாட்டினார்களோ அதனுடன் எவராலும் போட்டியிட முடியாது.

இதனை குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூஸாவின் சமுதாயம் பனீ இஸ்ராயில் அன்னாரை உடனடியாகவே ஒப்புக் கொண்டிருந்தார்கள். எனவே சமுதாயத்தின் புறமிருந்து அன்னாருக்கு எந்த துன்பமோ, வேதனையோ,அல்லது தடையோ ஏற்பட்டிருக்கவில்லை.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு தமது சமுதாயத்தின் புறமிருந்து எந்த துன்பமும் ஏற்பட்டிருக்கவில்லை. துன்பம் என்பது ஃபிர்அவ்ன் புறமிருந்தே ஏற்பட்டிருந்தது.

ஆனால், இதற்கெதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது சமுதாயத்தின் புறமிருந்து கஷ்டங்கள் மற்றும் நிராகரிப்பின் நிலைகளை எதிர்கொள்ள நேரிட்டது. பின்னர், அதுபோன்ற நிலைமைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெற்றிகள் எவ்வளவு உன்னதமான வெற்றிகளாக நிரூபணம் ஆகின! அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புகள் மற்றும் மேன்மைகளுக்கு எல்லாவற்றையும் விட முதன்மையான சான்றுகள் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க பிரச்சாரத்தை துவங்கியபோது, முதலிலேயே அன்னாருக்கு இந்த கட்டத்தை எதிர்கொள்ள நேரிட்டது. அதாவது (அன்னாரது) சமுதாயம் (அன்னாரை) நிராகரித்துவிட்டது. எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷியர்களுக்கு விருந்து கொடுத்தார்கள். மேலும், நான் உங்களிடம் ஒன்று கேட்பேன். அதற்கு பதில் அளியுங்கள் என்று அனைவரையும் விளித்து அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது, இந்த மலைக்குப் பின்னால் ஒரு பெரும் படை முகாமிட்டுள்ளது; மேலும், சந்தர்ப்பம் பார்த்து அது உங்களை அழிப்பதற்காக காத்துக் கொண்டிருக்கின்றது என்று நான் கூறினால் நீங்கள் அதனை நம்புவீர்களா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அதற்கு, நிச்சயமாக நாங்கள் இந்த விஷயத்தை ஒப்புக் கொள்வோம். ஏனெனில், நீர் எப்போதுமே உண்மையாளராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருந்துள்ளீர் என்று அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் கூறினர். அவர்கள் இதனை ஒப்புக் கொண்டுவிட்டபோது, பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள்! நான் மெய்யாகவே கூறுகின்றேன். நான் இறைவனின் தூதர் ஆவேன். மேலும் நான் உங்களை தண்டனையிலிருந்து அச்சமூட்டுகின்றேன். இந்த அளவு விஷயத்தை கூறிய உடனேயே அவர்கள் அனைவரும் கொந்தளித்துவிட்டனர். மேலும், تَبًّا لَكَ سَائِرَ الْيَوْمِ என்று ஒரு கயவன் கூறினான். அதாவது நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக நாசம் உண்டாகட்டும்! என்ற சொல்லை கூறினான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அவர்களின் இரட்சிப்பிற்கும், மேன்மைக்கும் எந்த விஷயங்கள் காரணமாக இருந்தனவோ அவற்றை மறுமைக்கு அஞ்சாத அந்த சமுதாயம் தீயதாக கருதியது. மேலும், எதிர்க்கத் தொடங்கிவிட்டது. தற்போது இதற்கெதிரில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தைப் பாருங்கள். பனிஇஸ்ராயீல் ஒரு கடுமையான உள்ளம் படைத்திருந்த சமுதாயமாக இருந்தபோதிலும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் பிரச்சாரத்தை உடனடியாக ஒப்புக் கொண்டுவிட்டது. மேலும், இவ்வாறு மூஸா (அலை) அவர்களை விட சிறந்தவரை அந்த சமுதாயம் ஒப்புக் கொள்ளவில்லை.

அன்னார் (அலை) தொடர்ந்து எடுத்துரைப்பதற்காக ஹஸ்ரத் மூஸா(அலை)அவர்களின் சமுதாயத்தின் உதாரணத்தை கொடுக்கின்றார்கள். அதாவது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை அவர்கள் ஒப்புக் கொண்டுவிட்டனர். ஆனால், ஹஸ்ரத் மூஸா(அலை) அவர்களை விட சிறந்த நபியாக இருந்தவரை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும், அவர்கள் எதிர்ப்பதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பத்தின் தொடர் ஆரம்பமானது. மேலும்,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக அனுதினமும் கொலை செய்வதற்கான சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன. இந்தக் காலம் எந்த அளவிற்கு நீண்டுவிட்டது என்றால், பதிமூன்று ஆண்டுகள் வரை தொடர்ந்து கொண்டே சென்றது. பதிமூன்று ஆண்டு காலம் என்பது சிறிய காலம் அல்ல. இந்தக் காலத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு துன்பங்களை எதிர்கொண்டார்கள் என்றால், அதனை எடுத்துரைப்பது கூட எளிதல்ல. சமுதாயத்தின் புறமிருந்து துன்பங்கள் மற்றும் இன்னல்கள் இழைப்பதில் எந்தக் குறைவும் மீதமிருக்கவில்லை. மேலும், மற்றொரு பக்கம் அல்லாஹ்வின் புறமிருந்து பொறுமை மற்றும் உறுதிப்பாட்டிற்கான வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தது. இங்கோ துன்பங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. மேலும் பொறுமை செய்யுங்கள்.மேலும், நிரந்தர மனப்பான்மையுடன் நிலைத்திருங்கள் என்று அல்லாஹ் கூறிக் கொண்டிருந்தான். எவ்வாறு முந்தைய நபிமார்கள் பொறுமை செய்தார்களோ அதுபோன்று நீரும் பொறுமை செய்வீராக! என்று மீண்டும், மீண்டும் கட்டளை வந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக உன்னதமான சிறப்புடன் வேதனைகளை சகித்து வந்தார்கள். மேலும் பிரச்சாரத்தில் சோம்பல் கொண்டவராக இருக்கவில்லை. மாறாக, முன்னேறிக் கொண்டே சென்றார்கள். அசல் விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய பொறுமை முந்தைய நபிமார்களின்

பொறுமையைப் போன்றிருக்கவில்லை.

ஏனெனில், முந்தைய நபிமார்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காகவே தோன்றியிருந்தார்கள். எனவே அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும், வழங்கப்பட்ட இன்னல்களும் அதே அளவிலேயே இருந்தன. ஆனால், அதற்கு எதிரில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுமை மிகப் பெரியதாக இருந்தது. ஏனெனில், எல்லாவற்றையும் விட முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயமே எதிரியாகிவிட்டது. மேலும், துன்பங்கள் கொடுக்கத் துவங்கிவிட்டது. பின்னர், கிறித்தவர்களும் எதிரிகளாகிவிட்டனர்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவனின் ஓர் அடியாராகவும், தூதராகவும் மட்டுமே இருந்தார்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டபோது, அவர்கள் கொந்தளித்துவிட்டனர். ஏனெனில், அவர்கள் அன்னாரை இறைவனாக்கி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி உண்மையைத் தெளிவுபடுத்திவிட்டார்கள். மனிதன் யாரை இறைவனாக்கிக் கொள்கின்றானோ, மேலும், எதனை தனது வணக்கத்திற்குரியதாக ஆக்கிக் கொள்கின்றானோ அதனை விட்டுவிடுவது எளிதல்ல என்பது விதியாகும். இன்னும்கூறப்போனால், அதனை விட்டுவிடுவது மிகவும் கடினமாகிவிடுகிறது. கிறித்தவர்களின் இந்த கொள்கை மிகவும் வலுப்பெற்றிருந்தது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் (பொய்) தெய்வத்தை மனிதனாக்கிவிட்டார்கள் என்பதை செவியுற்றபோது அவர்கள் உயிரை பறிக்கும் எதிரியாகிவிட்டார்கள். ஒருபக்கம், அன்னாரது சொந்த சமுதாயம் எதிரியாக இருந்தது; நிராகரிப்பாளர் எதிரியாக இருந்தார். சிலை வணங்கி எதிரியாக இருந்தார். பின்னர், கிறித்தவரும் எதிரியாகிவிட்டார்.

மேலும் இதேபோன்று, யூதர்களிடத்திலும் ஏராளமான இணை வைத்தலுக்குரிய சடங்குகள் தோன்றியிருந்தன.

அடுத்து, தொடர்ந்து யூதர்களின் குறிப்பு வந்துவிட்டது. அவர்களிடத்தில் இணை வைத்தலுக்குரிய சடங்குகள் உருவாகியிருந்தன. மேலும், அவர்கள் ஹஸ்ரத் ஈஸா மஸீஹை முற்றிலும் நிராகரித்து வந்தனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. அவர்கள் எச்சரிக்கப்பட்டபோது, அவர்களும் எதிர்க்கத் துவங்கிவிட்டார்கள். தற்போது யூதர்களும், கிறித்தவர்களும், இணை வைப்பாளர்களும், மற்ற மார்க்கத்தைச் சார்ந்தவர்களும் அனைவருமே எதிரிகளாகிவிட்டனர். ஏனெனில், யூதர்கள் - அவர்கள் ஹஸ்ரத் மஸீஹை நவூதுபில்லாஹ் ஏமாற்றுக்காரர் என்றும் பெரும் பொய்யர் என்றும் கூறிவந்தனர். இதற்கெதிரில், அன்னாரை பொய்யர் என்று கூறுவதால் நீங்கள் சுயமே பொய்யர் ஆக இருக்கின்றீர்கள்; ஏனெனில், அன்னார் (அலை) இறைவனின் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட நபியாக இருந்தார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களிடம் கூறினார்கள். அதுமட்டுமின்றி, அவர்கள் எதிர்த்து வந்ததற்கு ஒரு பெரும் காரணம் என்னவாக இருந்ததென்றால், அவர்கள் தங்களது அறியாமை மற்றும் குறைமதியின் காரணமாக காத்தமுல் அன்பியா பனீ இஸ்ராயீலிலிருந்தே தோன்றுவார் என்று புரிந்து வைத்திருந்தனர். ஏனெனில், அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப தவ்ராத்தில் இந்த விஷயம் உள்ளது. அதாவது, இறுதி நபியைப் பற்றி இருக்கின்ற முன்னறிவிப்பு எப்படிப்பட்ட சொற்களில் உள்ளதென்றால், அதனால் அவர்களுக்கு இந்த சந்தேகம் தோன்றிவிட்டது. அங்கு உங்களது சகோதரர்களிலிருந்து என்ற விஷயம் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருள் பனீ இஸ்ராயீல் என்றே அவர்கள் புரிந்து வைத்திருந்தனர். ஆனால் அதன் பொருள் பனீ இஸ்மாயீல் ஆக இருந்தது. எனவே "நான் காத்தமுன்நபிய்யீன் ஆவேன்" என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதத்தைக் கேட்டபோது பின்னர் அவர்களின் அனைத்து நம்பிக்கைகளும் தவிடு பொடியாகிவிட்டது. தவ்ராத்தின் முன்னறிவிப்புகளைப் பற்றி அவர்கள் என்னவெல்லாம் புரிந்து வைத்திருந்தார்களோ அவை அனைத்தும் தவறு என்று ஆக்கப்பட்டுவிட்டது. அதனால் அவர்கள் கொந்தளித்துவிட்டனர். மேலும், (இறைத் தூதர் (ஸல்) அவர்களை) எதிர்ப்பதற்காக எழுந்து நின்றுவிட்டனர். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 198 -200, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஓர் அஹ்மதி ஒரு கிராமத்திலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், தமது கிராமத்தில் மவ்லவியின் எதிர்ப்பைப் பற்றிக் குறிப்பிட்டார். மேலும், துஆவிற்காக கூறினார். மேலும், எனது கிராமத்தில் மதரஸாவில் ஊழியராக இருக்கும் ஒரு மவ்லவி கடுமையான எதிரியாக இருக்கின்றார். மேலும், எனக்கு மிகவும் துன்பம் கொடுக்கின்றார். எனவே இறைவன் அவரை அங்கிருந்து பணிமாற்றம் செய்து விடுவதற்காக, ஹுஸூர்! நீங்கள் துஆ செய்யுங்கள்! என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் புன்சிரித்தார்கள்.

மேலும், அவருக்கு இவ்வாறு புரிய வைத்தார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த ஜமாஅத்தில் நுழைந்துவிட்ட பிறகு பின்னர் அதன் போதனைக்கு ஏற்ப நீங்கள் அமல் செய்யுங்கள். துன்பங்கள் ஏற்படவில்லையென்றால் பின்னர் நற்கூலி எப்படி கிடைக்கும்?

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் பதிமூன்று ஆண்டுகள் துன்பங்களை சகித்தார்கள். அக்காலத்தில் ஏற்பட்ட துன்பங்களைக் குறித்து உங்களுக்குத் தெரியாது. மேலும், அந்த துன்பங்கள் உங்களுக்கு ஏற்படவுமில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு பொறுமை செய்யும்படியே போதனை நல்கினார்கள். இறுதியில், அனைத்து எதிரிகளும் அழிந்துபோனார்கள். ஒரு காலம் அருகில் (வர) இருக்கின்றது. அப்போது இந்த தீய மக்களும் தென்பட மாட்டார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். இந்த தூய ஜமாஅத்தை உலகில் பரப்ப வேண்டும் என்று அல்லாஹ் எண்ணம் கொண்டுள்ளான். இன்று இந்த மக்கள் நீங்கள் குறைவாக இருப்பதைக் கண்டு (உங்களுக்கு) துன்பம் கொடுக்கின்றனர். ஆனால், இந்த ஜமாஅத் பெரும்பான்மையாக ஆகிவிடும்போது, இவர்கள் அனைவரும் சுயமே மௌனமாகிவிடுவார்கள். இறைவன் விரும்பியிருந்தால் இந்த மக்கள் உங்களுக்கு துன்பமே கொடுத்திருக்க மாட்டார்கள்; மேலும், துன்பம் கொடுப்பவர்கள் பிறந்திருக்கவே மாட்டார்கள். ஆனால், இறைவன் அவர்கள் மூலமாக பொறுமைக்கான போதனையை வழங்க விரும்புகின்றான். சிறிது காலத்திற்கு பிறகு, ஒன்றுமே இல்லை என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். எந்த நபர் துன்பம் கொடுக்கின்றாரோ ஒன்று அவர் தவ்பா செய்துவிடுகின்றார் அல்லது அழிந்துபோய் விடுகின்றார். இவ்வாறு பல கடிதங்கள் வருகின்றன. அதாவது நாங்கள் வசைபாடி வந்தோம். மேலும் அதனை நற்கூலிக்கு காரணியாக கருதி வந்தோம். ஆனால், தற்போது தவ்பா செய்கின்றோம். மேலும் பைஅத் செய்கின்றோம் என்று கடிதங்கள் வருகின்றன. பொறுமை என்பதும் ஓர் இறை வணக்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

அன்னார் (அலை) கூறினார்கள்: பொறுமை என்பதும் ஓர் இறை வணக்கம் ஆகும். பொறுமை செய்கின்றவர்களுக்கு எப்படிப்பட்ட நற்கூலி கிடைக்கும் என்றால், அதற்கு கணக்கே இல்லை என்று இறைவன் கூறுகின்றான். அதாவது அவர்களுக்கு எல்லையற்ற அருட்களை வழங்குவான். இந்த நற்கூலி பொறுமையாளர்களுக்கு மட்டுமே உரியதாகும். இந்த வாக்குறுதி மற்ற இறைவணக்கங்களுக்கு அல்லாஹ் வழங்கவில்லை. ஒரு நபர் ஒருவருக்கு ஆதரவாக வாழ்க்கையைக் கழிக்கும்போதும், மேலும் அந்த நபருக்கு துன்பங்கள் கொடுக்கப்படும்போதும், இறுதியில் உதவி செய்யக்கூடியவருக்கு தன்மானம் வந்துவிடுகின்றது. மேலும், அவர் துன்பம் கொடுப்பவரை அழித்துவிடுகின்றார். இதேபோன்று நமது ஜமாஅத் இறைவனின் உதவியின் கீழ் உள்ளது. மேலும், துன்பங்களை எதிர்கொள்வதால் ஈமான் வலிமையடைந்து விடுகின்றது. பொறுமை போன்ற விஷயம் எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 234 - 235, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, ஒரு சந்தர்ப்பத்தில் பைஅத் செய்கின்ற நோக்கத்துடன் சிறிய அளவில்

மக்கள் காதியானிற்கு வந்திருந்தனர். மேலும் அன்னார் (அலை) அவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: உலகியல் வாதிகள் காரணிகளின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால், காரணிகளின் தேவையுடையவனாக இருக்க வேண்டும் என்ற நிர்பந்தம் அல்லாஹ்விற்கு இல்லை. சிலநேரம் அவன் விரும்பும்போது அவன் தன் அன்பர்களுக்காக காரணிகள் இன்றியே வேலையை முடித்து கொடுத்துவிடுகின்றான். சிலநேரம் காரணிகளை உருவாக்கி அந்த வேலையை செய்கின்றான். மேலும், சிலநேரம் இவ்வாறும் செய்கின்றான். அதாவது ஏற்கனவே உருவாக்கப்பட்டு தயாராக இருந்த காரணிகளை அவன் அழித்தும் விடுகின்றான்.

சுருக்கமாக, உங்களது செயல்களை தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். மேலும், இறைவனை எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். மேலும், கவனம் குறைவு செய்யாதீர்கள். ஓடக்கூடிய இரை சிறிதளவு சோம்பேறி ஆகிவிடும்போது வேட்டைக்காரன் அதனை தன் வசமாக்கிக் கொள்கின்றான். அதைப்போன்று, இறைவனின் நினைவில் இருந்து கவனக் குறைவாக இருக்கக் கூடியவர் ஷய்த்தானுக்கு இரையாகிவிடுகின்றார். தவ்பாவை எப்போதும் உயிர்ப்புடன் வையுங்கள். மேலும், ஒருபோதும் (அதனை) மரணித்ததாக ஆக்கிவிடாதீர்கள்.

அதாவது தவ்பா செய்யாமல் ஒருபோதும் இருக்காதீர்கள். எப்போதும் தவ்பா செய்து கொண்டிருங்கள்.

ஏனெனில், எந்த உறுப்பைக் கொண்டு பணி செய்யப்படுகின்றதோ அதுவே பயன்படக்கூடியதாக இருக்க முடியும். மேலும், எது (பயன்படுத்தப்படாமல்) வீணாக விட்டுவிடப்படுமோ அது பின்னர் நிரந்தரமாகவே செயலிழந்து விடுகின்றது. இதேபோன்று தவ்பாவையும் செயல்படக்கூடியதாக வையுங்கள். அப்போதுதான் அது செயலிழந்தாக (வீணானதாக) ஆகிவிடாது.

நீங்கள் உண்மையான தவ்பா செய்யவில்லையென்றால், பின்னர் அது கற்களில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். (ஆனால்) அது உண்மையான தவ்பாவாக இருந்தால் பின்னர் அது சிறந்த நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். மேலும், தனக்கான நேரத்தில் அது கனி கொடுக்கும்.

இன்றைய நாட்களில், இப்படிப்பட்ட தவ்பாவில் பெரும் பெரும் கடினங்கள் உள்ளன.

அன்னார் (அலை) புதிதாக பைஅத் செய்யக்கூடிய அந்த மக்களிடம் கூறினார்கள்: தற்போது நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு உங்களுக்கு நிறைய (ஏச்சுப் பேச்சுகளை) கேட்க நேரிடும். ஒரு தொழுநோயாளி, காஃபிர், தஜ்ஜால் போன்றவரிடம் நீங்கள் பைஅத் செய்துள்ளீர்கள் என்று மக்கள் பல வகையில் இட்டுக்கட்டுவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏசிபேசுவார்கள்.

அவ்வாறு கூறக்கூடியவர்களுக்கு முன் ஒருபோதும் ஆத்திரத்தை வெளிப்படுத்த வேண்டாம்.

அப்படிக் கூறக்கூடியவர்களுக்கு முன்னால் ஒருபோதும் ஆத்திரத்தைக் காட்ட வேண்டாம்.

நான் அல்லாஹ்வின் புறமிருந்து பொறுமை செய்வதற்காக தூதராக ஆக்கப்பட்டுள்ளேன்.

எனவே இந்த விஷயங்களை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனவே இறைவன் அவர்களுக்கும் நேர்வழி காட்ட வேண்டும் என்பதற்காக நீங்கள் அவர்களுக்காக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்தப் பணிக்காக அனுப்பப்பட்டுள்ளார்களோ அது பொறுமை ஆகும்.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிச்சுவட்டின் வழி நடப்பதில் தான் நமது வெற்றியும் உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நம்மை வெற்றிப் பெறச் செய்யக்கூடிய ஆயுதங்கள் இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு கோருதல்) மற்றும் தவ்பா (பாவங்களிலிருந்து முற்றிலும் விலகி இறைவன் பக்கம் முகம் திருப்புதல்) ஆகும்.

பதில் தாக்குதல் அல்ல. நம்மை வெற்றிப் பெறச் செய்யக்கூடிய ஆயுதம் இதுபோன்ற ஆயுதம் அல்ல. **மாறாக நம்மை வெற்றிப் பெறச் செய்யக்கூடிய ஆயுதம் இஸ்திக்ஃபார், தவ்பா, மார்க்கக் கல்வியை அறிதல், இறைவனின் மகத்துவத்தை கருத்தில் கொள்ளுதல், மற்றும் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல் ஆகும்.**

தொழுகை துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான திறவுகோல் ஆகும். நீங்கள் தொழுகின்றபோது அதில் துஆ செய்யுங்கள். மேலும், கவனக்குறைவாக இருக்காதீர்கள். மேலும் எல்லா வகையான தீமைகளிலிருந்தும், அது இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளுடன் தொடர்புடைய தீமையாக இருந்தாலும் சரியே; அல்லது இறைவனின் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளுடன் தொடர்புடைய தீமையாக இருந்தாலும் சரியே! அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 303, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எல்லா தீமைகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள்.

ஆக, இவை எப்படிப்பட்ட அறிவுரைகள் என்றால் இவை நமது வெற்றி மற்றும் முன்னேற்றத்திற்கான அடித்தளம் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப நாம் சரியான வடிவில் இஸ்திக்ஃபார், தவ்பா, மார்க்க விஷயங்களை அறிதல், ஐவேளை தொழுகைகள் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்தி வந்தால் பின்னர் நமக்கு வெற்றி உள்ளது. எதிரி கூச்சல் மற்றும் குழப்பத்தில் எவ்வளவு முன்னேறுவானோ அவ்வளவு அதிகமாக நாம் அல்லாஹ்வின் பக்கம் குனிய நேரிடும். இதுவே நமது வெற்றியின் இரகசியம் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனையே மீண்டும், மீண்டும் வலியுறுத்தியுள்ளார்களே தவிர, வேறு எந்த எதிர் நடவடிக்கையையும் வெளிப்படுத்தும்படி கூறவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று இன்ஷா அல்லாஹ் நமது வெற்றி என்பது எவ்வாறாயினும் நிச்சயிக்கப்பட்டது ஆகும்.

ஆயினும், இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, மதிநுட்பத்துடன் நாம் நமது பணியை தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். நிறைய பணிகளை மதிநுட்பத்தால் செய்ய முடியும். எனவே மதிநுட்பத்தை மேற்கொள்வது மிகவும் அவசியம் ஆகும். ஒவ்வொரு அஹ்மதியும் தனது இந்த பொறுப்பை புரிந்து கொண்டுவிட்டால் பின்னர் ஏராளமான விவகாரங்களுக்கான தீர்வை நாம் நமது நடத்தைகள் மற்றும் துஆக்களால் காணமுடியும். அல்லாஹ் நமக்கு பொறுமையை வழங்குவானாக. மேலும், துஆக்களுக்கான நற்பேறை வழங்குவானாக. மேலும், அவனது திருப்தியைப் பெறுவதற்காக இந்த விஷயங்களின்படி செயல்படுவதற்கான நற்பேறை அவன் நமக்கு வழங்குவானாக.

(ஆமீன்)

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

## ஜுமுஆ பேருரை

**இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து தோன்றவிருந்தவர் நானே ஆவேன். பூமியிலிருந்து காணாமல் போன அந்த ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் தவறுகளை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன் ( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் முதலில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும் அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வடிவில் கொண்டு வருவான்**

**எந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவரின் காலம் ஒன்றாக உள்ளதோ அதேபோன்று பணியும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை மீண்டும் பூமியில் நிலைநாட்டுவது ஆகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார் என்பது உறுதியாக நிரூபணம் ஆகின்றது. அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாக وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ என்ற வசனம் உள்ளது**

**இரண்டாவது கூட்டம் மேற்கூறப்பட்ட வசனத்திற்கேற்ப ஸஹாபிகளுக்கு ஒப்பான கூட்டம் ஆகும். அந்தக் கூட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டம் ஆகும். ஏனெனில், இந்தக் கூட்டமும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை பார்க்கக் கூடியது ஆகும். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழிப் பெறக்கூடியக் கூட்டம் ஆகும். மேலும் آخَرِينَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வத்தில் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது**

**இறைவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானை புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்தை வழங்குவதற்காகவும் அனுப்பியுள்ளான். மேலும், அவனது உதவி மற்றும் அருளால் எனது கரத்தில் விண்ணின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அவனது நாட்டம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப (எனது) துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன**

**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி........**

ஹக்கீக்கத்துல் வஹீ என்ற அந்த நூலில் எடுத்துக்காட்டாக சில அடையாளங்களை எடுத்துரைக்கின்றார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அந்த விஷயங்களுக்கான ஆதாரங்களை நீங்கள் கண்டு கொள்வீர்கள். அதாவது அந்நூலில் ஏராளமான உதாரணங்களை அன்னார் (அலை) வழங்கியிருக்கின்றார்கள். ஒருவர் அதனை படித்தால் அவருக்கு எண்ணற்ற விஷயங்கள் தெரிய வரும். அடையாளங்களும் தெரிய வரும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: (முபாஹலா என்ற) அதுபோன்ற போட்டியின்போது (அவர்களின் கூற்றின்படி) நானே அழிந்திருக்க வேண்டும். என் மீது மின்னல் விழுந்திருக்க வேண்டும். நான் அழிந்து போவதே விதிமுறையாக இருந்திருக்க வேண்டும். (எதிரிகளின் கூற்றின்படி) என்னிடத்தில் அனைத்து தீமைகளும் உள்ளன என்றால், பின்னர் என் மீது மின்னல் விழுந்திருக்க வேண்டும்.

இன்னும் கூறப்போனல், எவருக்கெதிராகவும் நிற்பதற்கான அவசியமே இருந்திருக்கக் கூடாது. நான் அவ்வாறிருந்தால் பின்னர் எவருக்கும் எனக்கெதிராக போட்டிக்கு வருவதற்கான அவசியமே இருந்திருக்கக் கூடாது. ஏனெனில், குற்றவாளிக்கு இறைவன் சுயமே எதிரியாக இருக்கின்றான்.

(அவர்கள் கூறுவதுபோன்று) நான் அப்படிப்பட்ட குற்றவாளியாக இருந்திருந்தால் பின்னர் இறைவன் சுயமே எனக்கு எதிரியாக இருந்திருப்பான். அல்லாஹ் உலகில் குழப்பத்தை விரும்புவதில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறு நேர் மாற்றமாக ஏன் தாக்கம் ஏற்படுகிறது? என்று இறைவனுக்காக சிந்தியுங்கள். ஏன் எனக்கு எதிராக (அவர்களின் கூற்றின்படி) நல்லவர்கள் அழிக்கப்படுகின்றார்கள். அதாவது பெயர் தாங்கி நல்லவர்களாக இருந்தவர்கள் ஏன் அழிக்கப்படுகின்றார்கள்?

எல்லாருக்கும் எதிரிலும் இறைவன் என்னை காப்பாற்றினான். இதிலிருந்து எனது கண்ணியம் நிரூபணம் ஆகவில்லையா? நீங்கள் என் மீது சுமத்துகின்ற இந்த ஆட்சேபனையும் எனது அற்புதமாகும். இதிலிருந்தும் எனது உண்மை நிரூபணம் ஆகின்றது. ஆக, எந்த தீமைகள் என் மீது சுட்டிக்காட்டப்படுகின்றனவோ அவையும் எனது கண்ணியத்தையே நிரூபணம் செய்கின்றன என்பது நன்றி செலுத்துவதற்கான நிலையாகும். (ஹக்கீத்துல் வஹீ, ரூஹானி கஸாயீன், தொகுதி 22, பக்கம் 2)

எவ்வாறிருப்பினும், இந்த சில உதாரணங்களையும், இன்னும் சில விஷயங்களையும் நான் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சான்றுகளிலிருந்து சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். அந்தோ! எதிரிகள் அன்னாருடைய நூல்களை படிக்க வேண்டுமே! அன்னாருடன் இருக்கும் இறை உதவிகளையும், இறை அடையாளங்களையும் பார்க்க வேண்டுமே! நான் கூறியதுபோன்று அவை பல பக்கங்களில் அல்ல மாறாக, பல நூல்களில் உள்ளடங்கியுள்ளன. காலத்தின் தேவையையும் பார்க்க வேண்டும்.

இன்னும் கூறப்போனால், காலத்தின் தேவைக்கு ஏற்ப சுயமே இந்த ஆட்சேபனை செய்யக் கூடிய ஆலிம்களும் கூட இந்த விஷயத்தை ஒப்புக் கொள்கின்றனர். அதாவது, இந்த காலம் ஒரு சீர்திருத்தவாதி மற்றும் மஹ்தியை எதிர்நோக்கியுள்ளது என்று ஒப்புக் கொள்கின்றனர். ஆனால், அதன்பின்னரும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டிருப்பவரை அவர்களே நிராகரிக்கவும் செய்கின்றனர். மேலும் பாமர முஸ்லிம்களையும் வழிகெடுத்து வருகின்றனர். வானத்தின் அடையாளங்கள் நிறைவேறிவிட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும் நிறைவேறிவிட்டன. ஆனால், அதன் பின்னரும் இவர்கள் தங்களது துர்பாக்கியத்தையே அழைத்துக் கொண்டு இருக்கின்றனர். இந்தப் பக்கம் அவர்கள் பார்ப்பதில்லை.

இந்த உண்மையை இன்று முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது வர வேண்டிய மஸீஹ் மற்றும் மஹ்தி வந்துவிட்டார் மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும் உண்மையான அடியாரும் இவரே ஆவார்; அவரது பைஅத்தின் கீழ் வருவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி அவசியமானதாகும்; மேலும் முழுமையான நன்றியுணர்வுடன் அவரது பைஅத்தில் இணைந்துவிட வேண்டும்; அவ்வாறு இதனை புரிந்து கொண்டால் பின்னர் அன்னாரை ஏற்றுக் கொண்ட பிறகு முஸ்லிம்களால் உலகத்தில் தங்களது மேன்மையை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும். மேலும், அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக முஸ்லிம்கள் ஆகிவிட முடியும். அவ்வாறில்லையென்றால், அவர்களின் நிலை இன்று என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே இருக்கும். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக.

ரமலான் மாதத்தில் அஹ்மதிகள் எங்கு தங்களுக்காக துஆ செய்கின்றார்களோ; ஜமாஅத்திற்கெதிரான எல்லா குழப்பங்களிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கு துஆ செய்கின்றார்களோ அங்கு முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் கண்களைத் திறப்பானாக. மேலும், அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றுவானாக. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்தை உண்மையான பொருளில் அறியக்கூடியவர்களாக ஆகுவதற்கான ஞானத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. கத்மே நுபுவத்தின் அந்தஸ்தை உண்மையான ரீதியில் அறியக்கூடியவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களும் அன்னாருடைய ஜமாஅத்துமே ஆவர் என்ற விஷயத்தின் புரிதல் அவர்களுக்கு கிடைத்துவிட வேண்டும். பாகிஸ்தான் அஹ்மதிகள் குறிப்பாக தங்களது நாட்டிற்காகவும் துஆ செய்ய வேண்டும். பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 08 June 2023 Issue No. 23

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

செய்ய வேண்டும். குழப்பவாதிகள், தீமையை விரும்பக்கூடியவர்கள், மற்றும் சுயநலவாத தலைவர்களிடமிருந்து நாட்டை பாதுகாப்பானாக.

இதேபோன்று புர்கினோஃபாஸ்'வின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. பங்களாதேஷின் அஹ்மதிகளை குறிப்பாக துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள். அங்கும் ஒவ்வொரு ஜுமுஆவிலும் ஏதாவது ஓர் அபாயம் இருந்து வருகின்றது. அஹ்மதிய்யத்தின் உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லாத் தீங்கிலிருந்தும் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும், ஒவ்வோர் அஹ்மதிக்கும் உறுதிப்பாட்டை வழங்குவானாக. மேலும், ஈமானிலும், உறுதியிலும் முன்னேறச் செய்வானாக. உலகின் அழிவிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் நின்று கொண்டிருக்கின்றது என்ற நிலைமைகள் இன்றைய நாட்களில் உள்ளன. வெளிப்படையான போர்களின் பக்கமும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகவும் அழிவு வரவுள்ளது. மேலும் ஒழுக்க ரீதியிலான தீமைகளும் உச்சத்தை தொட்டுவிட்டன. மேலும் இந்த மக்கள் அல்லாஹ்வை விட்டு எவ்வாறு விலகிக் கொண்டு இருக்கின்றனரோ அதனால் அல்லாஹ்வின் கோபத்தை தூண்டுபவர்களாக இவர்கள் ஆகிவிடாதிருக்கட்டுமாக. மேலும், அதன் காரணமாக பின்னர் அல்லாஹ்வின் தண்டனை அவர்கள் மீது இறங்கி விடாதிருக்கட்டுமாக.

அல்லாஹ் அஹ்மதிகளை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக. அஹ்மதிகளுக்கு தங்களது கடமை மற்றும் உரிமையை செலுத்துவதற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், எல்லா வகையான ஆபத்துகளிலிருந்தும் பாதுகாத்தவாறு தனது பாதுகாப்பிலும், அடைக்கலத்திலும் (அஹ்மதிகளை அல்லாஹ்) வைத்துக் கொள்வானாக.

இந்த ஓர் அறிவிப்பையும் செய்துவிடுகின்றேன். அதாவது வாரப் பத்திரிகையாக, இன்னும் கூறப்போனால் வாரத்தில் இரண்டு முறை வெளிவர துவங்கியிருந்த அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் நேற்று மார்ச் 23-ம் தேதியிலிருந்து தற்போது அது அல்ஃபஸ்ல் தினசரி என்ற வடிவத்தை பெற்றுவிட்டது. எனவே அதிக அதிகமாக உருது அறியக்கூடியவர்கள், படிக்கக்கூடியவர்கள் அதனை படிக்கவும் வேண்டும்; விலைக்கு வாங்கவும் வேண்டும்;சப்ஸ்கிரைப் செய்யவும் வேண்டும். அல்லாஹ் இதிலிருந்து பயன்பெறுவதற்கு அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. மேலும், அல்ஃபஸ்ல் பத்திரிகையில் எழுதக்கூடியவர்கள் சிறந்த கட்டுரைகளை எழுதக்கூடியவர்களாக திகழ்வதற்கும் அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக.

ஆமீன்

(அல்ஃபஸ்ல் தினசரி இன்டர்நேஷனல்,
ஏப்ரல் 14, 2023, பக்கம் 2 - 7)

(முற்றும்)

தமிழாக்கம் :
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

## முதல் பக்கத் தொடர்ச்சி... (தப்ஸீரே கபீர்)

பொருத்தவரை இதுபோன்ற சம்பவங்கள் நல்ல மூளை படைத்த மக்களிடத்தில் கிடைப்பதில்லை. மாறாக, எவர்களிடத்தில் பணம் இருப்பதில்லையோ அவர்களும் பிள்ளைகளை கொலை செய்வதில்லை என்பதையும் நாம் பார்க்கின்றோம்.

ஆக, இந்தக் கொலைக்கு வேறு ஒரு பொருள் உள்ளது என்பது தெரிய வருகின்றது. மேலும், மனிதர்களிடத்தில் இந்த குற்றத்தை நாம் தேடிப்பார்க்க வேண்டும். ஆக, நாம் பலதரப்பட்ட மனிதர்களின் நிலைகளை பார்க்கின்றபோது, சில மக்கள் கருமித்தனத்தின் காரணமாக பிள்ளைகளுக்கு சரியான தர்பிய்யத் கொடுப்பதில்லை. முழுமையான உணவு கொடுப்பதில்லை அல்லது அவர்களின் வளர்ச்சிக்கு அவசியமான உணவு கொடுப்பதில்லை என்பது நமக்கு தெரிய வருகின்றது.

இதுபோன்ற கருமிகள் நிச்சயமாக மூடர்களிடமே (காணக்) கிடைக்கின்றனர். (பிள்ளைகளாகிய) அவர்களுக்கு நமது செல்வம் செலவாகும் என்ற இந்த அச்சத்தின் காரணமாக விஷம் கொடுத்து அல்லது கழுத்தை நெறித்து தமது பிள்ளைகளை அத்தகைய மூடர்கள் கொன்றுவிடுகின்றனர். ஆனால், மற்றொரு வகையான கருமிகள் பொதுவான மற்றும் சரியான மூளை படைத்த மக்களிடம் பெரும்பாலும் காணக் கிடைக்கின்றனர். அதாவது, அவர்களிடம் பணம் இருக்கின்றது. ஆனால், கருமித்தனத்தின் காரணமாக நல்ல உணவு பிள்ளைகளுக்கு கொடுப்பதில்லை. உகந்த ஆடை (வாங்கி) கொடுப்பதில்லை. எந்த அளவிற்கு என்றால், சிலமுறை பிள்ளைகள் ஆடையின் குறைபாட்டின் காரணமாக நிமோனியா (காய்ச்சல்) போன்ற நோய்களுக்கு இரையாகி விடுகின்றனர். இப்படிப்பட்ட மக்கள் உலகில் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் காணக் கிடைக்கின்றனர். மேலும் எல்லா நாட்டிலும் இருக்கின்றனர். அதேபோன்று கொலை செய்வதன் பொருள் என்பதற்கு ஒழுக்க மற்றும் ஆன்மீகக் கொலை என்ற பொருளும் இருக்க முடியும். பணம் செலவாகிவிடும் என்ற அச்சத்தால் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கொடுப்பதில்லை. மேலும், ஒருவகையில் பிள்ளையின் ஒழுக்கம் அல்லது ஆன்மிக மரணத்திற்கு அவர்கள் காரணமாக ஆகிவிடுகின்றனர். இந்த செயலிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். மேலும், பிள்ளைகளின் ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கத்தை சீர்படுத்துவதற்கு அவசியமான அந்த செலவுகளை செய்வதற்கு தயங்காதீர்கள் என்று இந்த வசனத்தில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். குழந்தைகளை கொலை செய்வதை மனிதன் இயல்பிலேயே வெறுக்கின்றான். எனவே தான் இங்கு கொலை என்ற சொல்லை இறைவன் பயன்படுத்தியுள்ளான். எனவே, இந்த சொல்லின் பயன்பாட்டின் மூலம் இந்த விஷயத்தின் பக்கம் கவனத்தை அல்லாஹ் ஈர்த்துள்ளான். அதாவது, நீங்கள் எந்த சூழ்நிலையிலும் (உங்களது) பிள்ளைகளை உங்களது கரங்களால் கொலை செய்வதற்கு தயாராக மாட்டீர்கள். ஆனால், மற்றொரு வகையான கொலைக்கு நீங்கள் ஆளாகிக் கொண்டிருப்பதை நீங்கள் சிந்திப்பதில்லை. அந்நிலையில் (உங்களது) பிள்ளைகளின் உணவு மற்றும் ஆடையைக் குறித்து நீங்கள் கருத்தில் கொள்வதில்லை. மேலும், (இதன் காரணமாக) அவர்களின் உடல் ஆரோக்கியத்தை நீங்கள் நாசமாக்கி விடுகின்றீர்கள் அல்லது அவர்களின் தர்பிய்யத்தை நீங்கள் கருத்தில் கொள்வதில்லை. மேலும் அவர்களின் ஒழுக்கத்தை நீங்கள் நாசமாக்கி விடுகின்றீர்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 326, காதியான் பதிப்பு-2010 ஆம் ஆண்டு)

* * * * *

National
Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad